

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-12 தொகுதி-12 | August ஆகஸ்டு 1916. | No-1. பகுதி-1.

சத்ததிக் கழகு வத்திசெய் யாமை.

தமது வம்சம் பெருகுதற்குக் காரணமாய செயல்களைச் செய்யாதிருப்பவர் தமது வாழ்நாளின் பயனைப் பெறுவதில்லை யென்பது நிசயமாமாகலின், ஒவ்வொருவரும் தமது வம்சம் பெருகுதற்குக் காரணமாய செயல்களை மறவாது செய்தல் அவசி யின்றியமையாத கடமையாம். தமது வம்சம் பெருகுதற்குக் காரணமாய செயல் நன்மக்களைப் பெறுதலாம். நன்மக்களைப் பெறுதவர்க்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனு மில்லையாமென் பதை நன்குணர்ந்தவர் யாது செய்வர்? தமது மனையாளோடு கூடிவாழ்வர். தமது மனையாளோடு கூடி நன்மக்களைப் பெறுத வர் இம்மைத் துன்பம் மறுமைத் துன்பமென்னு மிரண்டையும் பெறுதற்குரியவராகின்றன சென்பது தவறாத விஷயமாம். இது

"பொன்னுடைய சேறும் புகழுடைய சேறுமற், றென்
னுடைய சேறு முடையசே—னின்னதில், புக்கேயுந் தாமரைக்
கைப் பூசாறுஞ் செய்யாப், மக்களேயி லில்லை தவ" ன்னு
ளனென்பா கூறுவதால் நன்கு விளங்குவதாம்.

ருவர் மற்றொருவரை நோக்கி, அவரது யோக க்ஷேமங்
களை விசாரிப்போது, முன்னர் யாது வினவுகின்றனர்? தங்களைத்
தெத்தனை பிள்ளைகளிருக்கின்றனை சென்றன்றே வினவுகின்றனர்?
இதனால் புத்திர பாக்கியம் மிகச் சிறந்தது மென்பது நன்கு விள

ங்குமன்றே? புத்திர பாக்கிய மில்லாதவர் மிகப் பெருஞ் செல்வ ராயிருப்பினும், அவரது வாழ்க்கை நல்வாழ்க்கை யாவதில்லையாம். ஒருவர் மிகப் பெரிய தன்பமுடையவராயிருப்பினும், அவர் தம் பிள்ளைகளோடு கலந்து பேசும்போது, அவர்க்குள்ள துன்ப மனைத்தும் தோன்ற தொழிகின்றன. புத்திர பாக்கியம் மன் பதிகை யெழிப்பதற்கு ஒரு நற் சாதனமாக விருத்தலின், புத் திர பாக்கியத்தைப் பெற வொவ்வொருவரும் தவறாது முயற்சி தல் வேண்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் "பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற— ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவனவற்றை யறி தற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை யாம் மதிப்ப தில்லை" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதை நாம் நன் குணர்வோமாயின், புத்திர பாக்கியத்திற்கு மேம்பட்ட பாக்கி யம் ஒன்றுமில்லை யென்பது நமக்குப் பிறழாது விளங்குவதாம். புத்திர பாக்கியம் பெறுதற்குரிய செயல்களைச் செய்யாது வேறு பாக்கியம் பெறுதற்குரிய செயல்களைச் செய்பவர் அப்பாக்கியங் களின் பயனைப் பூரணமாகப் பெறுவதில்லையாம்.

புத்திர பாக்கியத்தைப் பெற விரும்புகின்றவர் தமது மனை யாளோடு கூடி இன்புற்று வாழ்ந்து வருதல் வேண்டும். கணவ னொருவழி மனையள் ளொருவழியாக விருக்கும் குடும்பத்தில் நன்மக்க ளுண்டாவதில்லையாம். ஒரு குடும்பம் மேலும்மேலும் விருத்தியடைவதற்குக் காரணமா யிருப்பவர் அக்குடும்பத்திற் பிறந்த நன்மக்களேயாகளின், தமது குடும்பம் மேலும்மேலும் விருத்தியடைய வேண்டுமென்று விரும்புகின்றவர் தமது மனை யாருடன் மனமொத்து வாழ்ந்துவருதல் வேண்டும். கணவனும் மனையியும் மனமொத்து வாழ்வாராயின், அவர்க்குப்பிறக்கும் பிள்ளைகள் நற்குணநற்செய்கைகளுடன் குறைவிடமா யிருக்க, தமது தந்தைதாயர்களுக்கு வேண்டியவற்றை தாம் பெரிய வராயிய காலத்துக் தவறாது செய்துவருவர். இவ்வாறு செய்து வரும் பிள்ளைகளையுடையவர் தமது மூப்பு (இழப்) பருவத்தில் பெரிதும் வருத்தமுறவேண்டியில்லையாம். குழந்தைப்பருவ முடைய வராயிருக்கும்போது, மழலைச் சொற்கள் முதலியவற்றாலும், பெரியவராயபோது நன்மைதரும் காரியங்களைச் செய்வதா லும், தம்மை மகிழ்ச்செய்யும் பிள்ளைகளை யில்லாதவர் இம்மைப்

பயனும் மறுமைப் பயனும் மடைவதில்லையாம்; ஆகவே, ஒவ்வொருவரும் தமது மனையாளோடு மனமொத்து வாழ்ந்து கன்மக்களைப் பெறுதல் வேண்டுமென்பதை கம்பநாடர்க் குணர்த்தற் பொருட்டு நமது தமிழ்த் தேவதையாகிய ஔவைப்பிராட்டியாரவர்கள் "சந்ததிக் கழகு வந்திசெய் பாலமை-ஒருவனது மம் மெம் பெருகுவதற்கு ஏழுகாவது அவன் தன்மனையாளை மலடியாகச் செய்யாமல் அவளோடு கூடிவாழ்தலாம்" என்றருளிச் செய்தனர்.

ஒருவன் தன்னிலை வளராது தேய்தற்குக்காரணமாகிய கல்வினைகளைச் செய்யும் புத்திரரைப் பெறுவதினின், அவன் இறந்தபின் நல்லுலகஞ்சேர்வது சிச்சயமாமாகலின், ஒவ்வொருவரும் தமதுபுத்திரர்களைக் கல்விகேள்வி யறிவொழுக்கமுடையவராக்கு தல்வேண்டும். தம்புத்திரர்களைக் கல்வி கேள்வி யறிவொழுக்க முடையவராகச் செய்பவர்க்கு என்ன குறைவுண்டாம்? ஒரு குறைவு மூண்டாவதில்லையாம். இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவநாயனார் "தம்பொரு ளென்ப தம்மக்கள் - தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் ஆய்ந்தோர்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அச்சு முள்ளாடாத வறிவகத்தில்லாக் கொள்கை (ஆகென் போன்ற) மக்களைப் பெறுபவர் எப்பயனையும் பெறுவதின்மையின், ஒவ்வொருவரும் தாம் நற்குண நற்செய்கைகளே யுடையவராயிருத்தலும், தமது புத்திரர்களையும் நற்குண நற்செய்கையுடையவராகப் பழக்கி வருதல்வேண்டும்; அவ்வாறு செய்து வருபவர் தமதுபுத்திரர்வாயிலாகப்பெறுதற்குரியபயனை யடைவதில் தவறுவதில்லையாம். தசரதசக்ரவர்த்தி, பாண்டவேந்தன் முதலாயினோர் நமது வமிசம் விர்த்தியாகவேண்டும்;சாம்ராஜ்கியடைதல்வேண்டுமென்ற கருத்தினாலே புத்திரபாக்கியத்தைப் பெறவிரும்பினர்? புத்திரபாக்கியம் பெறுவது பற்றி முயலாது, வேறு காரணமாக விருந்து வருபவர் அம்மி தினையாக ஆறிழிக்கவர் போல்வாராகின், வேறு காரணமாக விரும்பாது, தமது மனையோடு மனம் கலந்து வாழ்ந்து, கன்மக்களைப் பெற்றிருப்பவர் இம்மையிலே யனுபவி மறுமையிலும் கல்லையடைதற்குரியவராவிருக்கின்றனரென்பதை நம்மனோர் மறவாது கவனித்து வருதல்வேண்டும்.

புதல்வர்க்குத் தந்தையும் தாயும் செய்யுமாவசியத்தை நன்குணர்ந்து, தம் புதல்வரைத் தெரிவிலொழுகவிடாது கல்வதியிலொழுகச்செய்து வருபவரது குடும்பம் மேன்மேலும் விருத்தியடைவதாம்.

பிரமசரியம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்னும் மூவகை யாசிரமத்திலிருப்பவர் அடித்துப் பிழைப்பதற்கிடமாயிருப்பவர் திருஷ்டாந்தியிளாகலின், திருஷ்டாந்தமாயிருப்பவர் பிரம்சரிய முதலிய கல்வகையாசிரமமும் விருத்தியாதற்பொருட்டும், அறம் வளர்தற் பொருட்டும், மறம் தேய்தற்பொருட்டும், தாம் கற்கதியடைதற்பொருட்டும், கண்ணிரண்டு மொத்தமையாயிருக் தொன்றைப்பார்ப்பதுபோலத் தமது மனைவியோடொத்தமையா யிருந்து, கன்மக்களைப் பெற்று, தமது குடும்பத்தை விருத்தி செய்து வருதல்வேண்டும்; இவ்வாறு செய்வதே அவர் வம்சம் பெருகுவதற்கு அழகாயிருப்பதாம்.

பரீதன் கண்களை கோச்சிச்செய்த தவத்தின் மாட்சி மையால், அவனது மூன்னோர் கலுலகடைந்தன என்பது நமக் கெண்ணவுணர்த்துகிறது? சற்புத்திரனொருவன் தனது தந்தை தாயர் திருவேதேயத்தற்பொருட்டு அவரை நோக்கிச்செய்யுங் தானதருமங்களால் அவர் கல்லுலகடைகின்றனர் என்பதை யன்றோ உணர்த்துகின்றது?

பிரமோத்தரகாண்டம்.

உத்தரீக்கட வுதித்தபார் முழுவது மொருங்கே
வத்து காடொழு மாயிலை வளமெலாம் பெறினு
மிந்நி லாதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினு
மைந்த னின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

கந்தபுராணம்.

மைந்த னோப்பெறு மின்றது மாலொப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுக்
தந்தை மாண்டெழித் தம்முறைக் தேற்றிட
வந்த பின்னடை றும்றுதற் கேயன்றே.

இப்பிரயோகங்களினின்று கன்குணர்தற் பாலனவாம்.

சில முக்கியமான குறிப்புக்கள்

"சர்க்கரை கசப்பது வாயின்குற்றம்" என்பதுபோல் தற் காலம் இங்கிலீஷ்படித்த வர்களுடைய தர்மங்களைத் தொலைக்க வந்திருக்கும் போலி ஆர்ய்களை அகேயுகங்களாகத் தங்கள் முன் னோர்கள் கூறி வரைகளையும் அரதபரயுள்ள வேத சாஸ் திரங்களையும் படிக்காமல், யாரேனும் "ஜோப்பியரோருவர் ஜாதி விசாரம் பாராட்டவேண்டியதில்லை" என்று ஒரு புஸ்தகம் எழுதினால் அதை வெகு சிரத்தையாய்ப் படித்து அவ்வாறு அனுஷ்டிக்கத்தொடங்குகிறார்கள்! இதற்குள்ளகாரணமென்றால், 'கலி ராஜனுடைய சர்ப்பத்தினுற்கடியுண்ட ஆசாமிகளாகிய இவர்களுக்கு இரட்சைக் கட்டிக்கருப்புக்கட்டியாகத் தோன்றுவதே பன்றிவே றல்ல.' "கொள்ளென்றால் வாயைத் திறக்கிறதும் கடிவாளமென் றால் வாயை மூடுகிறதும்" குதிரையின் சுபாவமாம்; அதுபோல், தற்காலத்திய ஆசாரஹீனர்கள் தகப்பனார் தேடி வைத்த நிலத்துக் கும், பணத்துக்கும், தாங்கள் பாத்தியஸ்தர்களென்று சிவில்கோர் ட்டில் வழக்கிடுகிறார்கள்! தகப்பனார் அனுசரித்த மதமும் சம்பிர தாயங்களும் தங்களுக்கு முரியனவாமென்று நினைத்து அவைகளை யும் அனுசரிக்கவில்லையே! அறியோம்!! இதுதான் கலியின் கூத்துப்போலும்! "வெளியே சொன்னால் வெட்கம்" அடியில் வருவதை ஒவ்வொருவரும்படித்து வெளியே சொல்லாமல் இர கசியமாய் வைத்துக்கொள்ளவேண்டும். காவேரி தீரத்திலுள்ள ஓருரில் ஆங்கிலேய பாஷையைக் கற்று, விபரீதஞானமடைந்த சிலர் ஒரு சங்கம் கூடினார்கள். அவர்களுள் பிராமணர்கள் 3, முதலி யார் 1, காயுடு 1. இவ்வைவரும் சேர்ந்து ஏற்படுத்திய சங்கத்திற்கு "ஆர்ய (அல்ல, ஆசார)சீர்திருத்தச் சங்கமென்று பெயர்". ஆரம்பத்தில் ஜாதி விசாரம் அவசியமில்லையென்ற ஓர் உபரியாலம் செய்து அதை எல்லோரும் ஆமோதித் தார்கள். முதலியார் எழுந்திருந்து 'ஆமோதிப்பது போதாது. அனுஷ்டிப்பதவசியம்' என்றார்; அப்படி அவ்வைவர்களும் சம் மதித்து அருகிலிருந்த ஒரு சூத்திரப் பையனிடம் ஒரு பாத்திரத் தைக் கொடுத்து ஜலம் கொண்டுவரும்படி சொன்னார்கள். அவ் வாறே அவன் கொண்டுவந்தவுடன் இரண்டு பிராமணர்கள் அதை வாங்கி படபடவென்று குடித்துவிட்டார்கள். முதலியா ரும் காயுடுவும் பாதொரு கஷ்டமுமின்றி யருந்தினார்கள். கடை

யோக நின்ற பிராமணனுடைய மனம், அந்த "ஜலத்தையுட் கொள்ளத் துணியவில்லை; பாத்திரத்தை உதவுமாறும் தூண்டினான்; ஆனால் உட்கொள்ள மனம் இசையவில்லை. நீரைக் குடிக்கச் சொல்லிவிட்டால் மற்ற கால்வர்களும் அவன் மண்டையைப் பிளந்து விடுவார்கள். ஆதலின் அவர்களுக்கு ஸமாதானமாய் ஒன்று சொல்ல வேண்டுமென்று முதலியாரை நோக்கி "ஐயா" நீர் ஏன் பிராமண்யத்தைக் கெடுக்கிறீர்? இதனால் நான் மாத்திரம் கெட்டுப் போகிறேனென்றி நீர் கெட்டுப்போகவில்லை. சமையல்காரரும் ஜாதி வித்யாஸம் பாராட்டாமலிருப்பதற்கு வேறொரு வழியிருக்கிறது; இதோ 5 ரூபாய் கொடுக்கிறேன்; இதைக்கொண்டு ஒரு ஆடு வாங்கி கம்மூர்த் தோட்டியிடம் கொடுத்துச் சமையல் செய்யச்சொல்லி அவனுடன் நாம் சமபந்தியாய்ப்போஜனம் செய்யவேண்டும்; அப்படிச் செய்தாலன்றி நாம் ஜாதிவித்யாஸத்தை விட்டதென்பது எப்படாது என்றார். அதற்கு முதலியார் நான் பறையனுடன் சாப்பிடமாட்டேன்; அவன் தாழ்ந்த ஜாதி யென்றார். உடனே பிராமணன் காலும் இந்தத் தீர்த்தத்தை உம்முடன் சாப்பிடமாட்டேன்; நீர் தாழ்ந்த ஜாதி என்றார். பிறகு சபையானது சர்வாபரணமாகக் கலைந்துவிட்டது; எல்லோரும் இச்சங்கதியை வெளியே சொல்லுகிறதில்லை யென்று பிரதிக்ஞை செய்துகொண்டு கலைந்து போனார்கள். ஆகா! என்ன அழகான லீலை! அல்லாஹ் செய்த காரியம் எவ்வளவு உபகாரமானது!

"கர்மத்தை எவ்வாறு ஒழிக்கலாம்" என்பது ஒரு கேள்வி. முன்னோ முன்னாலேயே பிடித்து வெளியிலுமுள்ள செம்பிலுள்ள களிம்பை அதற்கினமான புளியால் தேய்த்துப் போக்கடிப்பது போலும் கர்மத்தைக் கர்மத்திலேயே விலக்கிக் கொள்ளவேண்டும்; நாம் செய்யவேண்டிய கர்மம் இன்னதென்பதைக் கர்மயோகத்தில் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக: நாம் வெளியே செல்லும்போது, ஸ்திரீகளெதிர்ப்பட்டால் அவர்களைப் பார்க்கலாகாது; கண்ணை (நேத்ரவிருத்தியை) மூடிக்கொள்ளவேண்டும்; ஆகாசமது வெளியேயுள்ள வஸ்துக்களைப் பார்க்கவிடாது, உள்ளேயுள்ள ஆத்மாவைப் பார்க்கும்படி (ஆத்மாபிமுகவிருத்தியை) பழக்கவேண்டும். மறுஷ்யன் வீட்டில் வக்கீல் தன் பெண்சாதியாயினும் அவள் நிர்வாணியாயிருக்கும்போழுது பார்க்கலாகாது. இதனால் காமத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் வெல்லும் வழி

வேண்டும். இன்னும் விரதாதிகளை அனுஷ்டிக்குமாறு கூறியிருப்பது சரீரத்தில் அபிமானமற்றுப் போவதற்காகவே. மனுஷ்யன் இம்மாதிரிக் கர்மங்களைச் செய்வதால் மனதைத் தன்வசமாக்கி, அதை ஈசுவராலயடைய பாதாரவிந்தத்தைப் பற்றும்படி கட்டாயிட்டு, ஞானத்தால் ஆத்மாவைத் தரிசித்து முடிவில் பிரஹ்மமாய் விளங்குகின்றான். மக்கா யோகியாயிருந்தாலும் அவன் கர்மம் செய்தே தீரவேண்டும். எவன் கர்மம்பரிஷ்டனாகிறானே அவன் பதிதனென்பதில் சந்தேகமில்லை.

கர்மத்தை எப்போது விட்டு விடலாம்? கர்மத்தை யொரு போதும் விட்டுவிடலாகாது. ஆனால் பிரஹ்மவிசாரணை செய்யும் போது சிறுகாலம் கர்மத்தை விட்டிருக்கலாம். மற்றக் காலங்களிலெல்லாம் கர்மத்தைச் செய்தே வருதல்வேண்டும். தூங்கு கின்றவன் கைகளால்போல் கருமம் தானே நழுவவேண்டும். அதனால் காமே சோம்பலினால் விட்டுவிடல் கூடாது.

"கொக்கு நுட்டையைப் பழித்ததுபோல்" என்று ஒரு பழமொழியுண்டு. அதாவது ஒரு கொக்கு வழியே போய்க்கொண்டிருந்த ஓட்டையைப் பார்த்து 'உன் கழுத்து நீளம்' என்று பழித்தது! அதற்கு ஓட்டை, கொக்கை நோக்கி "நீ கண்ணாடியில் உன் கழுத்தைப் பார்த்துக்கொண்டால் என்னைப் பழிக்கமாட்டாய்" என்றது. அதுபோல் தற்காலம் பிராமணர்களைச் சூத்திரர்கள் பழிப்பதும், சூத்திரர்களைப் பிராமணர்கள் பழிப்பதும் வழக்கமாயிருக்கின்றன. உண்மையாக வேத சாஸ்திரங்களின் மூலமாகவும், ஸ்ரீகுருநாதன் மூலமாகவும் அதிகாரம் பெற்றுத் தம் கடமையை நன்றாக அறிந்தவர்கள், இந்த அவிவேகிகளை இழிந்தும் போகிமதக் கலகலவியிற் சிக்கார். எல்லாரும் கடவுளின் இவ்ய குமாரர்களாகவிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தம் வொரு தொழிற்புரிந்து இவ்வுலகத்திற்கு நன்மை செய்து வருவதைப் பார்த்து விவேகி ஆனந்தமடைய வேண்டும்.

T. K. இராமபத்ர சர்மா,
வைய்யாச் சேரி.

சந்திரனை விழுங்கிய கழுதை!

(ஒரு கதை).

அயிலுக்கு விடுமுறை நாள் வந்தது. "அயிலு" என்றால் என்ன தெரியுமா? வண்ணுர அருணுசலத்தின் கழுதை; "அயிலுக்கு ஓய்வு நாளென்றால் பரிசுத் தேரட்டைகள் ஹதம் என்றாகி விடும். என்ன செய்கிறது? எல்லாருக்கும் தாக்ஷண்ணியப் பட்டவன் அருணுசலம்; அவன் கழுதையை ஒருவரும் பட்டிக்கு ஓட்டிக் கொண்டு போகிற வழக்கமில்லை. ஆகவால் ஓய்வு நாட்களில் அயிலுக்குச் சொண்டாட்டந்தான். மூட்டைச் சுமக்கவேண்டிய வேலையில்லை; கல்லு தினி; மேலும் விதேல. என் சரியாகச் சாப்பிடாது?

அயிலுக்கு விடுமுறை நாள் வந்தது. அது பகல் முழுதும் தண்ணிவிட்டப்படி ஊரெல்லாந்திரிந்து விளாபயுடைக்க மேய்ந்து விட்டுச் சூரியன் அஸ்தமித்த பிறகு தண்ணீர் குடிக்க வண்ணுன் குளத்திற்குச் சென்றது. அன்று பௌர்ணமி தினம். சந்திரன் தனது பூர்ண கலைகளோடு மப்பு மந்தாரமில்லாத வானத்தில் தோன்றி மிகவும் அழகாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். அதனுல், பூமியின் மீது, மாசு மறுவில்லாத ஒரு வெண் திரை போடப்பட்டது போலிருந்தது.

கழுதைக்குத் தாகம் பொறுக்க முடியவில்லை. உடனே அது சீக்கிரமாகக் குளத்தினிறங்கி நீர் குடிக்க ஆரம்பித்தது.

அயிலுக்குப் பின்புறமாய்க் குளக்கரைமீது இரு பேர் சகதோஷமாக உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். கிராமங்களில் பௌர்ணமி மிகவும் விசேஷமான தினம்; பட்டணங்களில் இரவிலே எப்போதும் கல்லின் வெளிச்சம் உண்டே. சந்திரனை ஒருவரும் எதிர்பார்க்கிறதில்லை. கிராமங்களில் அங்ஙனமன்று; அநேகமும் பாழிலே பூர்ணசந்திரனுடைய தினத்தன்று எல்லாரும் வெண்ணிலவில் தங்களிஷ்டவைக் கதிப்பது வழக்கம்; மேலும், அக்கிராமத்தில் அப்பா! பிச்சு வையர் வீட்டுக்குத் தேவட்டிக் கிருடர்கள் வந்து போனது முதல், அந்த ஊர் ஜனங்கள் இரவில் சரியானபடி தூங்குவதில்லை. ஒரிடத்தில் கூத்து; மற்றோரிடத்தில் கானம்; அக்கிராமத்தில் பஜனை; இங்ஙனம் இரவு முழுதும் சந்தடியாக இருக்கும் பாழில், பௌர்ணமியன்றால்

சந்தோஷத்திற்குக் கேட்பானேன்? ஆகையால் அன்று அவ்வூர் ஜனங்களிற் சிலர் வண்ணான் குளக்கரையில் காலம் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆயிஷு கண்ணீரில் வாயை வைத்துக் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்துக் கொண்டிருந்தது. தாகசாந்தியினால் உண்டாகும் இன்பம் அதிக நேரம் நிலைத்திருக்கும் பொருட்டு, மெதுவாகவே நீரருந்திற்று. அது தண்ணீரில் வாய்வைத்த இடத்திலே சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் கண்டார்கள்.

ஆயிஷு ஒரு வாய்த் தண்ணீரிழுத்தது. உடனே நீரின் மீது வட்டமான அலைகள் உண்டாகி சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் கலைத்தன; ஆயிஷுக்குத் தாகவிடாய் தீர்த்துவிட்டது. அது கரை மேலும் சமயமாக இருந்தது. அப்போது வானத்திலே வடமேற்கு மூலையில் ஒருசிறிய கருமேகம் தோன்றி அதிவேகமாக ஆகாயமுழுதும் பரவிற்று; உடனே எங்கும் இருளாயிற்று; குளிர் கூட இருளில் அமிழ்ந்தது.

அதனால் கரைமீதிருந்த கூத்தாடப்பன் தன்னருகிலிருந்த உடையானைப் பார்த்து; "என்ன! உடையானே! அருணாசலத்தின் கழுதை சந்திரனை விழுங்கிவிட்டதுபோ லிருக்கிறதே", என்றான். எல்லாரும் கலைந்து வீட்டுக்குப் போய் விட்டார்கள். உடையான் தனது தெருவிலுள்ள கணக்கனிடத்தில் போய் "அருணாசலத்தின் கழுதை ஆயிஷு சந்திரனை வாயில் போட்டுக் கொண்டது" என்றான்.

கணக்கன்:—நிஜந்தானா?

உடையான்:—ஆம். என்ன இருள்பார்!

கணக்கன் சோவியிடம் சென்று, "கேட்டாயா, சோவி ஒரு சேதி" என்றான்.

சோவி.—என்ன?

கணக்கன்:—அருணாசலத்தின் கழுதை நிலாவை விழுங்கி விட்டது.

சோவி:—நிலாவையா!

கணக்கன்:—ஆமாம்; என்ன இருட்டி பார். இத்தச் சேதியை ஒருவரிடமும் சொல்லாதே.

சோமி:—ஏன்?

கணக்கன்:—இது ரகசியம்.

சோமி.—ரகசியமா-சரி.

இதைக் கேட்டபோதே சோமிக்கு ராவில் தினவெடுக்க ஆரம்பித்தது. உடனேபோய் வெல்லக்கடை வாத்தியிடத்தில் சொன்னான். வாத்தி கயினுவுக்குச் சொன்னான். கயினு அக்கிரகாரத்தில் மூக்கு சாமசாமி அய்யருக்குச் சொன்னான். மூக்கய்யர் கோட்டக்காரனிடமும், கோட்டக்காரன் மணியக் காரனிடமும் மாக இவ்வண்ணம் வண்ணுர அருணுசலத்தின் கழுதை இலாவை விழுங்கின சேதி பாழூர் முழுதும் பரவிற்று.

பொழுது விடிந்தது. மந்தை வெளியில் கூட்டம். "சந்திரன் குளத்திலிறங்காது; கழுதையால் சந்திரனை விழுங்க முடியாது. ஆகையால் இச்சேதி உண்மையாயிராது" என்று சிலர் சொன்னார்கள். அப்போது மூக்கு-சாமசாமி அய்யரும், அக்கய்யரும் சேர்ந்து "என்ன கழுதையால் சந்திரனை விழுங்க முடியாதா? உங்களுக்கென்ன தெரியும்? என்று சொன்னார்கள். உடனே "கேளும் உடையாரே" என்றார் அக்கய்யர்; "சென்ற வருஷம் சந்திர கிரஹணம் வந்ததே உனக்குத் தெரியுமா?

"தெரியும்" என்றார் உடையார்.

அக்கய்யர்:—சரி! ஒரு பம்பு சந்திரனைச் சென்ற வருஷம் விழுங்கியிருக்க, அதே சந்திரனை ஒரு கழுதை இந்த வருஷம் விழுங்கக் கூடாதாயென்ன? தெரிந்ததா?

உடையார்:—அப்படியானுல் இன்றைக்குச் சந்திர கிரஹணம் சமி.

அக்கய்யர்:- இந்தக் கிரஹணத்தைப் பஞ்சாங்கத்தில் காணும். ஒருவேளை 8 நம்பர் பஞ்சாங்கத்தைப் பார்த்தால் தெரியும்.


இதற்குள் மாகேளை தூண்டிக் கொண்டு போவதற்கு வந்த பறகூத்தன் சொன்னதாவது: "ஒருவேளை சந்திரனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருந்தால் என்ன மோ அதைப் பார்த்திர்களா" யேமாரே?

"பறப்பயிலே, உனக்கென்ன தெரியும்? உன் வேலையைப் பாரடா. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நடுவில் வந்து உளறுகிறாய். மாடுகளை ஓட்டிக்கொண்டு போ. இதெல்லாம் உனக்குத் தெரியாது" என்று பா பாரப்புடன் சொன்னார் மாப்பிள்ளை கப்பையர்.

எல்லாரும் சேர்ந்து, அன்றிரவு சந்திரன் தோன்றுவிட்டால் பகலை நிலாவை விழுங்கினது உண்மையே யெனத் தமக்குள் நிர்மானஞ் செய்துகொண்டார்கள். உடனே கூட்டம் கலைந்து, ஒவ்வொருவனும் இரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
புதுவை.



கதா விசேஷமாகும்.

All Rights Reserved.

முன்னொருகாலத்தில் இவ்வவனிமின்னன் ஸுஷேத்தன் என்னு மொரு அரசன் அரசுபுரிந்து வந்தனன். இவன் மிகச் செல்வம் படைத்தவன். அவனுக்குக் கன்னிடம் யாம்போர்க்கு ஸமமாய பொன்னுக்குக் குறைந்த கொடுப்பதே தெரியாது. எவருடை னேனும் அவன் நிறைவேறும்வார்த்தைபாடினால் அவனுக்கு ஐந்து லக்ஷம் கொடுப்பான். அவன் வறுமைபோலார்களின் வறுமைக்கு வறுமையைச் செய்துவந்தான். இதனால் லக்ஷாதிபன் என்னும் அவனுடைய பெயர் பிரஸித்தி யடைந்திருந்தது. அவ்வரசனுடைய மனிகையின் வாசலில் கஷ்மாதத்தன் என்பவன் அல்லும் பகலும் உட்கார்ந்திருப்பான். அவனது ஆஸ்தி அவன் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த ஒரு கந்தைத்துணி மாத்திரமே; அவன் தலையில் சடை விழுந்திருந்தது. அவன் கோடைகாலத்திலும் மாரிகாலத்திலும் அவனண்மினை வாசலினிட்டு நகருவதில்லை. அரசன் கஷ்மாதத்தன் அண்மினை வாசலில் காத்திருப்பதைப் பார்த்துக்கொண்டே போவான். கஷ்மாதத்தன் அவ்வண்மினை வாசலில் காத்திருந்து மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அரசன் தயாநதியாயிருந்தும் கொடையாளியாயிருந்தும் கஷ்மாதத் தனுக்கு யாதொன்றும் கொடுக்கவில்லை.

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றபொ
முது அவனைத் தொடர்ந்து கையில் ஒரு தடியை யெடுத்துக்கொ
ண்டு கூடமாதத்தன் போனான். வனத்தில் மன்னவன் கையில் வில்
லேந்தி வாகனத்தின்மீது அமர்ந்தான். அவனைச் சுற்றிலும் வே
னையுமிருந்தது. அரசன் அம்புமாரிபொழிந்து புலி, காட்டுப்பன்றி,
மான் முதலியவைகளைக்கொன்று கொண்டிருந்தான். அப்பொழு
தும் காலுடையிலிருந்த கூடமாதத்தன் அவ்வரசனுக்கு முன்பாகத்
தனியாய்த் தன் தடியால் பல மிருகங்களைக் கொன்றுகொண்
டிருந்தான். அரசன் இதனைப்பார்த்து "இவன் மிகவும் பராக்
ரமசாலியாயிருக்கிறான்" என மனத்தில் நினைத்துக்கொண்டான்
இவ்வாறிருக்கும் நிறைவன் அவனுக்கு யாதொன்றும் கொடுக்க
வில்லை. அரசன் வேட்டையாடிக் களைத்தபின் விடையாற்றிக்
கொள்ளத் தன் நகரமடைந்தான். கூடமாதத்தன் மீண்டும் முன்
போலவே அவ்வரசன் மாளிகை வாசலில் உட்கார்ந்திருந்தான்.

பின்பு ஒருநாள் லக்ஷிதத்த மன்னவன் தனதுதேசத்தின்மீது
படையெடுத்து வந்திருந்த பகைவர்களை எதிர்த்து முறியடிக்கச்
சென்றான். அவ்விடம் ஒரு பெரும் போர் நடந்தது. அந்த
யுத்தத்தில் கூடமாதத்தன் அரசன் முன்னிலையில் தன் கருங்காலித்
தடியால் பல பகைவர்களைக் கொன்று சௌரியத்தைக் காட்டி
னான். அரசன் தன் சத்துருக்களைத் தோல்வியடையத் தன்
நகருக்குத் திரும்பினான். ஆனால் கூடமாதத்தன் பராக்கிரமத்
தைப் பார்த்தும் அவனுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. இவ்வா
கூடமாதத்தன் கஷ்டப்பட்டுக்கொண்டு இங்கு வருஷங்களைப
போக்கினான்.

ஆறுவது வருஷம் பிறகுபிறகு ஒருநாள் வேந்தன் கூடமாதத்
தனைப் பார்க்கையில் மன்னனுக்கு தயையுண்டாகி "இவ்வளவு
காலமாய் வருத்தப்படுகிறான்; காலிவனுக்கு ஒன்றும் கொடுக்க
வில்லை; ஆகையால் இவனுக்குத் தெரியாதபடி இவனுக்கேதாவது
கொடுத்துப் பார்ப்போம். இந்த கிர்ப்பாக்கியனுடைய பாவம்
இன்னும் அற்றுப்போய்விட்டதோ இல்லையோ வென்பதையும்
இடைமை கடாட்சம் இவனிடம் உண்டாயிருக்கிறதோ இல்லை
யோ வென்பதையும் பார்த்துவிடலாம்" என்று ஆலோசித்தான்.
பின் தன் பொன்னிஷ்டத்தில் தழைத்த ஒரு கொடி யெலுமிச்சம்

பழத்தை யெடுத்து அதை இரண்டாய்ப் பிளந்து, அதில் இரத்னங்களை நிரப்பி ஒரு லம்படியைப்போலச் செய்தான். பின்பு மன்னவன் தன் ஆஸ்தான மண்டபத்திற்கு வெளியில் சமைத்துவிட்டிச் சொலுவிருந்தான். அதற்கு யுக்தராத்து ஜனங்கள், மந்திரம் கட்டும் பிற்தரார்கள், அமைச்சர்கள் முதலிய யாவரும் வந்தனர். ஆசார்களுடன் சுஷ்மாதத்தனும் வந்து சேர்ந்தான். அப்பொழுது அரசன் அன்புடன் "ஏ சுஷ்மாதத்தா? இங்கே வா" வென்று கூப்பிட்டான். அவன் அரசன் தன்னை அழைத்தது கேட்டு மகிழ்ந்து அரசனுக்கு எதிரில் நின்றான். அரசன் அவனை "ஆமே சுஷ்மாதத்தா? நீயாக ஒரு ஸ்லோகத்தை இயற்றிச் சொல்" என்று கட்டளையிட்டான்; அதைக்கேட்டு சுஷ்மாதத்தன் அடியிற் கண்ட பொருளுள்ள ஒரு ஸ்லோகத்தைக் கூறினான்:— நதிகள் யாவும் நிறைந்திருந்தும் கடலை யடைந்து நிரப்புகின்றன; மறண்டு கிடக்கும் ராஜாக்கள் குட்டைகளை நிரப்புகிறதில்லை. அப்படியே இலட்சுமி தெகியாளனாவன் செல்வமுள்ளவர்களுக்கு மேலும் மேலும் கொடுக்கின்றாள்; நீயாக்கியனுயிருப்பவன் கஞ்சனிடம் போவதில்லை.

அரசன் மேற்கண்ட கருத்துள்ள ஸ்லோகத்தைக் கேட்டு சுஷ்தாஷ்மண்டத்து விஜயபூர்த்த இரத்னங்கள் நிறைந்த அந்த வெலுமிச்சம் பழத்தை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். அச்சமயத்தில் அச்சபைக்கு வந்திருந்தோர் சர்ப மனிமாரகையால் ஒருவனைப் பார்த்து ஒருவர் "இந்த சுஷ்மாதத்தன் எவ்வளவு நிர்ப்பாக்கியனுயிருக்கிறான். மன்னவனுக்கு யாரிடம் இருபை பண்டாயென்றதோ அவர்களின் வறுமைக்கு லவுமை வந்து விடுமே? இப்பொழுதோ இந்த வழமை அவனுக்கு ஸகல ஜனங்களும் பார்க்கப் பிரியமாய்ப் போய் முடிவில் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்திருக்கிறார்? உண்மையாகவே பாவருக்கும் இந்தஸ்தைக் கொடுக்கும் கற்பகவிருக்ஷமானது ஏழைகளின் வீட்டில் போஜன் போஜன் புதை மரமாகி விடுகிறது" என்று பேசிக் கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அந்த சுஷ்மாதத்தன் இரத்னங்கள் நிறைந்த அந்த எலுமிச்சம் பழத்தைப் பெற்றுக்கொண்டு தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியே சென்றுவிட்ட "சாஹஸிகி" என்னும் புதிய கன்னியைத் தேடுவதற்கு வந்தான். அவன் தனிஞ்சிப் பழத்தைப் பார்த்து அது

சிறுத்தொண்ட நின்னுடைய சுகுமாரத்தாளுக்கு ஒரு துணியைக் கொடுத்து அப்பழத்தை வாங்கிக்கொண்டு அரசனுக்குக் கனிக் கையாகக் கொண்டு கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அப்புத்த சன்னியாசினியை "உமக்கு இப்பழம் எவ்வாறு கிடைத்தது" என வினவினன். அதற்கு அப்புத்த சன்னியாசி தனக்கு சுகுமாரத்தன் கொடுத்தான் என்றார். அரசன் அதைக் கேட்டு வியப்புற்று அப்போ? அவ்வேழைப்பிராமணன் இன்னும் வீற்கவில்லையே? எனத் தனக்குள் அதனை எடுத்துக்கொண்டு ஒரு மிடிமம் கழிந்து சபையினின்று எழுந்திருந்து தன் நித்ய கர்மானுஷ்டானஞ் செய்யச் சென்றான். சுகுமாரத்தன் அத்துணியை விற்று ஆகாரஞ் செய்துவிட்டு எப்பொழுதும்போல அரசமாளிகையின் வாசலில் உட்கார்ந்திருந்தான்.

மறுநாளும் மன்னவன் முதனாள்போல ஒரு பெரிய சபை கூட்டினன். சுகுமாரத்திலுள்ள ஜனங்கள் பலரும் அரசனைக் காணவந்தனர். அங்கு சுகுமாரத்தனும்வந்து சேர்ந்தான். அரசன் அந்தப் பார்த்து "முன்போலவனைத் தன்னருகில்வரவழைத்து, அவனையுட்காரவைத்து, அவன் முன்னர்க்கூறியசுலோகத்தைமீண்டும் சொல்லச் சொல்லி சன்னியாசிமூலமாக முதல் நாள் கொடுத்ததுபோல உள்ளே இரகசியமாய் இரத்தினங்கள் வைக்கப்பட்ட ஓர் எலுமிச்சம் பழத்தை அவனுக்கு இனாமாக அளித்தான். அதனைப் பார்த்த சபைபோர் ஒருவர்க் கொருவர் "இப்பொழுது இராஜசன்னிதானமும் வீணைப் விட்டதோ? இவன் தரித்திரம் இன்னும் தீரவில்லை." எனப் பேசிக்கொண்டனர். அந்த சுகுமாரத்தனும் அப்பழத்தைப் பெற்றுக்கொண்டு வெருப் படைந்து "அரசன் இரண்டாந் தடவை கருணை கூர்ந்தும் வீணாகி விட்டது" என்று நினைத்துக்கொண்டு வெளியில் போனான். அப்பொழுது அவ்விராஜ்ஜியத்தில் வந்த ஒரு புது உத்தியோகஸ்தன் எதிரே வந்தான். அவன் சுகுமாரத்தன் கையிலிருந்த பழத்தைப் பார்த்து அதனைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டி, ஒரு ஜோடி வஸ்திரம் கொடுத்து அப்பழத்தை விலைக்கு வாங்கி அரசனுடைய களத்திற்குச்சென்று எலுமிச்சம் பழத்தைக் காணிக்கையாகக் கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அவனை "உனக்கு இப்பழம் எது" என வினவினன். அதற்

கவன் அது தனக்கு சுமார்த்தனிடமிருந்து கிடைத்தென்று கூறினான். அதனைக் கேட்டு வேந்தன் "அக்கோ? இலக்ஷ்மிக்கு இன்னும் இவனிடம் மனமிரங்கவில்லையே" என்று ஆலோசித்து மிகத் துக்கித்து சபையை விட்டு எழுந்திருந்தான். சுமார்த்தன் வேஷ்டியைக் கடை வீதிக்குக் கொண்டு போய் அங்கு ஒரு துணியை விற்று ஆகாரஞ் செய்து கொண்டு மற்றொரு துணியை இரண்டாய்க் கிழித்துத் தான் உடுத்திக்கொண்டான்.

திரும்ப மூன்றும் நாளும் ராஜசபை கூட்டினான். அதற்கு முன்போல நகரத்தாரனைவரும் சுமார்த்தனும் வந்துசேர்ந்தனர். அரசன் சுமார்த்தனை யழைத்து அவன் முன்னர்க்கூறிய சுலோகத்தை மீண்டும் சொல்லச் செய்து முன்போல் ஒரு லக்ஷ மிச்சம்பழத்தையே கொடுத்தான். இதனைப்பார்த்தவரனைவரும் ஆச்சரியமடைந்தனர். சுமார்த்தன் அதைப் பெற்றுக்கொண்டு வெளியேபோய்த் தன்னை நிசேவித்த அரசனுடைய ஆஸ்தானாயகியாகிய ஒருதாசியிடம் கொடுத்தான். இராஜலக்ஷ்மியாகிய விருக்ஷத்தின் மெல்லிய இலையைப் போன்ற அவ்வாசகாயகியானவள் சுமார்த்தனுக்குப் பின்னுதவிண்டாகப் போகும் பலனுக்கு அறிகுறியாக (ஒரு இலை புஷ்பம் கொடுப்பதுபோல) அவனுக்கு ஒரு பொன் காணயம் கொடுத்தாள். சுமார்த்தன் அன்னையினும் அதை வைத்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தான். அம்மையவள் கொண்டதையல் அரசனிடம்சென்று பிரியத்துடன் பருத்தும் பழுகாயுமிருந்த அப்பழத்தைக் கொடுத்தனள். அரசன் அதை தான் கொடுத்த பழமென்றறிந்து தன் காதலியை "அதனவ்விடம் கிடைத்தது" என வினவினன். அதற்கவள் "தனக்கு சுமார்த்தன் கொடுத்ததாகக் கூறினள். இதனைக்கேட்டு அரசன் சிந்தையுற்று "இன்னுங்கூட திருமகள் கடாக்ஷம் அவன் மீது படவில்லையே? அவன் நீயின்னும் அழியவில்லை யாகையால் அவன் தான் கொடுக்கும் பரிசனைப் பலனற்றதாக வென்னுகின்றனன். அக்கோ இதற்கு என்ன செய்வது? எனவுத்தரித்து எலுமிச்சம்பழத்தை ஓரிடம் பத்திரமாய் வைத்துவிட்டு எழுந்து தன் நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்யத்தொடங்கினன்.

மறுபடி சபாமண்டபத்தின் முன்போலவே சபைகூடி யிருந்தது. அதனில் பிரதானர்கள், அமைச்சர்கள், சேனாபதிகள் முதலியவர்கள் பிருதிவியாய் வந்திருக்கையால் மிக்க நெருக்கமாயிருந்தது. அங்கு க்ஷமாதத்தனும் வந்திருந்தான். அவனை அரசன் அன்புமையில் வரவழைத்து, உட்காரச்செய்து, முன்போல சுலோகஞ் சொல்லச்சொல்லிக் கனிப்படைத்து திருஷ்டி எனுயிச்சம்பிரதத்தைக் கொடுத்தான். அது சபையோர்கள் கையில் வந்ததும் தவறிக் கீழேவிழுந்து இரண்டு துண்டாயிற்று. உடனே உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தினங்கள் வெளியில் விழுந்து சபாமண்டபத்தைப் பிரகாசிக்கச் செய்தன. இதனைப்பார்த்த ஜனங்கள் "அரசரே! இந்த மர்மம் நமக்குத் தெரியாததால் முன்னரசன் மீண்டும் மகிழ்வோடு திருநாடாண்டோம். மன்னவன் கருணை இவ்வாறன்றோ இருக்கின்றது" எனப் பேசத் துவங்கிவிட்டனர். அதனைக் கேட்டுச் சோமன் "இவனுக்கு இலட்சுமி கடாக்ஷமுண்டாயிருக்கின்றதை வெண்பாவை முதலியவர் இவ்வாறு பரிகாஸஞ் செய்தனர்; மூன்று நாளாய் இவன் பாபம் தீரவில்லை. இன்றைய தினம் இவன் பாபம் தீர்ந்துவிட்டமையால் இன்று இலக்ஷ்மி அவனுக்குப் பிரஸன்னமாயிருக்கிறாள்" எனக்கூறி அவனுக்கு ஆபரணங்களோடு சோமன்கள், வஸ்திரங்கள், குதிரைகள் முதலியவைகளைக் கொடுத்து அவனை ஒரு பிரதானஞ்செய்தான். சபையோர்களும் சந்தோஷத்தும் மன்னவனை மெச்சிக்கொண்டார்கள். அதன் க்ஷமாதத்தனுக்கும் சபையோர்க்கும் விடைகொடுத்துவிட்டுத் தான் தன் மாளிகைக்குச் சென்றான்.

மேற்கூறிய சரித்தரத்தால், பொறுமையுடையவர் பூமியையாள்வர் என்பதும், அவசரப்படுவது கூடாதென்பதும், கொளரியம் வாய்ந்தவனே மன்னனாயிருக்கவேண்டுமென்பதும், கொடுமையால் புகழுண்டாகுமென்பதும், முற்காலத்தில் குடிகள் இராஜ சபைக்குச் செல்வது வழக்கமாயிருந்தனென்பதும், ஆய்ந்தோய்ந்து பாராது தோன்றியபடி கூறும் ஜனங்களின் வாயை மூடுவது கடினமானதென்பதும் பிறவும் வெளிவருகும்.

Pandit M. M. Narayanasamy Aiyar,
Mudikondan.

சர்வஞ் சின்மயம்.

"வருங்கற் பகவின் விளர்த்தே னவ்தென் பலசொல் லியும்
பயனென், கருங்கச் சொல்லும் பயன்கொளாய் தோன்ற விங்குள
னவுஞ்சித், தெருங்கப் புறத்துஞ் சித்தல்லே யுள்ளதுஞ் சத்
தில்லேயற, கெருங்கும் முதுஞ் சித்தி யான்சித்து சித் இலக
ணைசித்தே"

என்று வாசிட்டன் கூறுவதைச் சிறிதும்று நோக்குவோமா
யின் "சர்வம் சின்மயமே" என்று செவ்விதாய் விளங்கும்.

சர்வம் சின்மய மென்பது வடமொழி வாக்கியமாம். சர்வம் அறிவின் காரியமென்பது இதன் பொருளாம். "எல்லாம்" என்பது சாண்முகப்பிரமன் முதல் அரும்பிரக வுள்ள (தேவர், மக்கள், நாகர், விலங்குகள், ஊர்வன, பறவைகள், பூச்சி புழுக்கள், தாவரங்கள், பொன், கல், முதலிய) சேதன சேதனச் சகமான பௌதிக உலகங்கள் யாவையுங் குறிக்குஞ் சொல்லாம்.

அதிர்ஷ்டமாயும் சாஸ்திரப் பிரமாணத்தினுற் சித்திக்கும் சுவர்க்க நரகங்களும், மற்ற அண்டங்களும் "எல்லாம்" என்னும் பதத்தில் அடங்கு மென்றறிதற் பாலதாம். "சித்து" அல்லது அறிவென்பது ஆன்மா அல்லது பிரஹ்ம வடிவ ஞானமாம். "மயம்" என்பது காரியம் அல்லது வடிவமாம்.

"எல்லாம் பிரஹ்ம வடிவ அறிவின் காரியம் அல்லது எல்லாம் பிரஹ்ம வடிவமேயாம்" என்பதின் திரண்ட பொருளாம்.

காரணமின்றிக் காரியந் தானே உண்டாதல் கூடாதென்பது நியாயமாதலால், சர்வதிசியப் பிரபஞ்சங்களும் ஒரு காரணத்தினின்று தான் உண்டாயிருத்தல் வேண்டும். இக்காரணந்தான் பிரஹ்மம். பிரஹ்மம் சாஸ்வதம் உலக காரணமாமோ அதைச் சற்று ஆராய்வாம்.

காரணம் இருவகைத்து. ஒன்று உபாதானம்; மற்றொன்று நிமித்தமாம். ஒரு குடத்திற்கு மண் உபாதான காரணமும் குலாலன் நிமித்த காரணமுமாம்.

காரியப் பிரபஞ்சங்களுக்கு பிரஹ்மம், குடத்திற்கு மண் போல் உபாதானமா ? அல்லது குலாலனைப் போல் நிமித்தமா ? என்ற சந்தேகம் உண்டாகலாம். பிரஹ்மம் ஒன்றே உலகத்திற்கு உபாதானமாயும் நிமித்தமாயும் இருக்கிறது. சிலந்திப் பூச்சி, தன் வலைக்குத்தானே உபாதானமாயும் நிமித்தமாயும் இருத்தல் போலாம். இங்ஙனங் கூறின்,

"ஜீவனின் ஜடசரீரம் அதன் வலைக்கு உபாதானமாயும் சேதனம் நிமித்தமாயும் இருக்கிறது. இங்ஙனமே பிரஹ்மத்தின் ஜட சரீரம் உலகத்திற்கு உபாதானமாயும் சேதனம் நிமித்தமாயும் இருத்தல் வேண்டும். இருக்கவே பிரஹ்மத்தினிடத்தில் பலப்பல விருத்தமான ஜடசேதன பாகங்கள் சித்திக்கும். சித்திக்கவே பிரஹ்மமாகிய சேதனம் கண்டமாய், கண்டப் பொருள்கள் எங்ஙனம் அநித்தமாமோ அங்ஙனமே பிரஹ்மமாகிய சேதனமும் அநித்தமாய் முடியும். ஆதலால் பிரஹ்மத்தினிடத்தில்ஜகத் காரணத் தன்மையைக் கூறுதல் கல முடையதாகுமா" வென்ற சந்தேகம் உண்டாகலாம். மேற்கூறிய மேற்றி இருஷ்டாந்தத்தில் சிலந்தியின் சரீரம் வலைக்குப் பரிணமி உபாதான காரணமாம். உபாதான காரணம் ஆரம்பம், பரிணாமம், விவர்த்தமென மூவகைத்து. ஒரு சரீரத்திற்கு, கை, கால், தலை, உடல் முதலியன ஆரம்ப உபாதான காரணங்களாம். தயிர்க்குப்பால் பரிணமி உபாதான காரணமாம். (தயிற்றாவு திருஷ்டாந்தத்தில்) அரவிற்குக் கயிறு விவர்த்தோபாதானமாம்.

உலகிற்கும் பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணமேயன்றி பரிணமி உபாதானமன்று. பிரஹ்மத்தை உலகிற்கு ஆரம்ப பரிணமி உபாதானமென்று கொண்டாலல்லவோ பலப்பல விருத்தமான ஜட சேதன பாகங்களாகிய இரண்டு சத்திய பொருள்கள் சித்திப்பதன் மூலமாய் "ஏகமேவாத்விதீயம் பிரஹ்மம்" என்ற சுருதிக்கு விரோதமாய்ப் பிரஹ்மம் கண்டமாயும் அநித்தியமாயு முடியும். விவர்த்தோபாதானமாகக் கொண்டால் யாதும் விரோதமின்றும். எங்ஙனம்? கயிற்றில் தோன்றும் அறவு தோற்ற மாத்திரத்தில் விளங்கி, தனது விவர்த்தோ பாதான காரணமாகிய கயிற்றின் இருப்பிற்கு விரோதி யாவதிலையன்றே ? அங்ஙனமே சர்வப் பிரபஞ்சங்களும் தோற்ற மாத்தி

தத்தில் விளங்கும் காலத்தும் தமது விவர்த்தோ பாதான காரண மாயை பிரஹ்மத்தின் இருப்பிற்கும், விளக்கத்திற்கும் விரோதி யாவதில்லையாம். ஆதலால் பிரஹ்மம் உலகத்திற்கு அபின்ன நிமித்தோபாதான விவர்த்த காரணமென நிச்சிக்கத்தது.

ஆம். சுயிற்முசு திருஷ்டாந்தத்தில் மயக்கம் நீங்கி சுயி ரென்றறிந்த பின்னர் பாம்பு தோன்றுவதில்லை. பிரஹ்மத்தைத் தவிர உலகம் இன்றென்றுணர்ந்த பின்னரும் உலகம் தோன்று "கின்றதே" யெனின் காணலிற் றோன்றும் நீர் காணலைத் தவிர இன்றென்றுணர்ந்த பின்னரும் கானல் ஜலம் தோற்றுவது போல பிரஹ்மத்தைத் தவிர உலகம் இன்றென அறிந்த பின்னரும் உலகம் தோற்றும். இத்திருஷ்டாந்தமும் தவறுடையதாகும். ஏனெனில் கானல் நீர் அநுபவ யோக்கியமன்றும். ஆனல் உலகமோ கண், காது மூக்கு முதலிய இந்திரியங்களுக்கு அநுபவ யோக்கியமாம். ஆதலால் மனத்தினிடத்திற்றோன்றும் சொப்பன உலகைப் போல் பிரஹ்மத்தினிடத்தில் சர்வ திருஷ்டிப் பிரபஞ்சங்களும் தோற்றுகின்றன. சொப்பன உலகிற்கு உபாதானமும், நிமித்தமும் மனமே யாதலாலும்போல சர்வ திருஷ்டிப் பிரபஞ்சங்களுக்கும் உபாதானமும் நிமித்தமும் பிரஹ்மமேயாம்.

இக்காரணத் தன்மை மாயா உபஹித பிரஹ்மத்திற்கே நிச்சிக்குமே யன்றி சுத்தப் பிரஹ்மதிற்குச் சித்திப்பதில்லையாம். தானே பாம்பாகத் தோற்றக்கூடிய சக்தி சுயிற்றில் இருப்பதால் தான் பாம்பு தோன்றுகிறது; இவ்வண்மை தானே உலகமாய்த் தோற்றக்கூடிய சக்தியையுடைய பிரஹ்மத்தான் விவர்த்தோபாதானமாகும். அசக்தியற்ற சுத்தப்பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணத் தன்மையைப் பெறுவதில்லையாம். என்? சக்தி (சரிய உலகம்) இன்மையின் கங்ஙனம் பிரமம் நீங்கிய காலத்தில் சுயிற்றினிடத்தில் தோன்றிய பாம்பானது மித்தையாய் அங்ஙனம் பாம்பாகத் தோற்றுவிக்கும்படியான சுயிற்றின் சக்தியும் மித்தையாய்ப் போகின்றனவோ அங்ஙனமே ஒரு காலத்தில் நானுவாகத் தோற்றும் சர்வப் பிரபஞ்சமும் மித்தையாய் இங்ஙனம் தோற்றுவிக்கும்படியான பிரஹ்மத்தின் சக்தியும் மித்தையாய் முடிகின்றன. ஆதலால் சுத்தப் பிரஹ்மம் ஒன்றே சத்தியம், சக்தியான மாயை மித்தையாமெனப் பெறப்பட்டது.

பிரஹ்மம் சத்தியமெனக் கொண்டால் முக்காலத்தும் இருக்க வேண்டும். உலகம் தோன்றும்போதும் பிரஹ்மம் தோற்ற வேண்டும். அப்படி உலகம் தோன்றும்போதும் பிரஹ்மம் தோற்றுவது யாருக்கும் அநுபவமில்லை. ஆகையால் பிரஹ்மம் சத்திய மென்பது எங்ஙனங் கூடும்" என்பது சிலருக்குச் சந்தேகம் உண்டாகலாம். பிரஹ்மம் உலகம் தோன்றும்போதும் தோன்றிக் கொண்டேயிருக்கிறது. இது யாவருக்கும் அநுபவமேயாம். எங்ஙனமெனின், இது பாம்பு என்னும் பிரமம் நீங்கிய காலத்து "இது கயிறு" என்கிற உண்மை ஞானம் உண்டாகின்றது. "பாம்பு" என்கின்ற விசேஷ ஞானம் உள்ளபோது "கயிறு" என்கிற விசேஷ ஞானம் இல்லாமலிருக்குமேயன்றி பயக்க காலத்திலுள்ள இது என்கிற சாமான்ய ஞானம் தெளிவு காலத்தில் இல்லாமலிருக்கவில்லை. மற்றோர், பயக்ஷ காலத்திலும் தெளிவு காலத்திலும் அநுகதமாயிருக்கின்றது.

இங்ஙனமே மித்தையாகிய சர்வ திருஷ்ய பிரபஞ்சங்களும் தோற்றுகிற காலத்திலும் பிரஹ்மம் சாமான்ய வடிவமாய் இருந்துகொண்டு, அம்மித்தையாகிய பிரபஞ்சங்களை விளக்கிக் கொண்டும் முக்காலத்திலும் பாதிக்கப்படாமல் சத்தியமாயிருக்கின்றது. உலகப் பொருள்களெல்லாம், அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபம் என்னும் ஐந்து அம்சங்களோடு கூடியனவாயிருக்கின்றன.

கடமென்னும் பெயர் "காமமாம்". வனை, குயவு முதலியன அதன் "ரூபங்களாம்". கடம் இருக்கிறதென்பது "அஸ்தியாம்". கடம் விளங்குகின்ற தென்பது பாதியாம். அது வேண்டுமென்னும் இச்சைக்கு விஷயமாயிருப்பதால் பிரியமாம்." இவற்றில் அஸ்தி, பாதி, பிரியவடிவமான மூன்று அம்சங்களும் "சில பதார்த்தங்களிலும் வியாபகமாயிருக்கின்றன.

ஒரு பதார்த்தத்திற்குள்ள நாமரூபங்கள் மற்றொரு பதார்த்தத்திற்கில்லையாம்; ஆகையால் அவ்வியாபகமாம்.

சஞ்ஜ்ஞா ஸ்பூர்த்திகளில் அநுகதமான "இது" என்னும் அம்சம் எங்ஙனும் சத்தியமே அங்ஙனமே எல்லாப்பதார்த்தங்களிலும் வியாபகமான அஸ்திபாதி பிரியங்கள் அதிஷ்டானமாய்ச் சத்தியமாயும் இருக்கின்றன.

யிற்றதுகள்போன்ற காமரூபங்கள் கற்பிதமாயிருக்கின்றன. ஆதலால் அன்பு, பாதி, பிரியங்கள் சேதனம்சங்களாம். காமரூபங்கள் அவித்தை அல்லது மாயையின் அம்சங்களாம். இச்சேதனம்சங்கள் சர்வநிருபியப் பிரபஞ்சங்களுக்கு முன காகவே கற்பிதமாகிய காமரூப அம்சங்களை யொழித்து சோகின் அலை சின்மயமாகவே விளங்குகின்றன. ஆதலால் முன் "ஸர்வம் சின்மயம் காணுகின்றது நிஜமித்தும் இன்னு நிரூபிக்கப்படுகின்றது. இன்டாவதில்லை" என்று சுருதிகள் கூறுகின்றன. இங்ஙனம் எல்லாம் பிரஹ்ம வடிவமாக சோக்குவதே ஆனந்தமாகச விருத்தியெனப்படும். இதனை யிடைவிடாது அப்பியசிப்பதால் ஜன்மத்தைத் தரத்தக்கசித்தசம்பங்கள் யாவும் நசித்து ஆனந்தமாகச சொரூபமாய் விளங்கலாம். ஆதலால் "ஸர்வம் சின்மயம்" என்கின்ற பாவனையை மனிதப் பிறவி பெற்ற நாம் ஒவ்வொருவரும் இடைவிடாது அப்பியசித்து ஆனந்தமாக சொரூபமாய் விளங்க முயலுதல் வேண்டும்.

க. சுப்பிரமணிய அய்யர்,

திருவேட்டீசுவரன் பேட்டை, சென்னை.

காமத்தால் வரும் கெடுதி.

(1) திருப்பதிமலை யோகத்துள்ள சோமன்களுள், ஒரு சோமதரில் வேங்கடசோமனென்னுமொரு உழவனிருந்தான். அவன் செய்கை யறிவில் குறைந்தவனுக விருப்பினும் இயற்கை யறிவில் மேம்பட்டுச் சமயோசிதமாகப் பேசுதலும் செய்வதுக்கன வற்றைத் தக்க சமயங்களில் செய்து முடித்தலும், தனது சோமத்தாரிடத்தும் தனது சோமத்தைச் சுற்றுள்ள சோமத்தாரிடத்தும் அன்பாயிருந்தது முடையவனுக விருந்தான். அவன் ஒருநாள் காலையில் மலையோகத்துள்ள தனது வினைநிலத்தில் சட்டி யுழுதுகொண்டிருக்கும்போது, ஒரு வேங்கைப்புலி, மலையிலிருந்திறங்கி மிகு வேகமாக அவனுடைய பாயவந்தது. அவன் புலியின் பாய்ச்சையை யறிந்திருந்தவனுதலினுல், புலியை நோக்கி "புலியாரே! நீசென் வேகமாகப் பாய வருகின்றீர், உமக்கு யாது வேண்டும்? அதைக் கூறினுல் தவறாது யான் சொல்லுகின்றேன்" என்ற கூறினன். அதுகேட்டு, அப்புலி சற்று

போகித்து நின்று, இவனுக்கு நமது பாலை நெறித்திருத்தலால் இவனைக் கொல்லுதலடாது; இவனது கலப்பையிற் கட்டியுள்ள கொழுத்த விவ்விரண்டு எருதுகளையும் கொன்றுண்பதே தக்கதா மென்று நிர்மானித்து, அவ்வழுவின கோக்கி 'தூ உழுவனே!' உனக்கு எங்களுடைய பாலை நெறித்திருக்கின்றமைபற்றி, உன்னைக் கொன்றுண்ண, எனக்கெண்ணமுண்டாகவில்லை; உன்னுடைய இவ்விரண்டெருதுகளும் கன்றுக் கொழுத்துப் பூரித்திருத்தலால், அவற்றைக் கொன்று தின்ன வக்தேன்; இவ்விழுபத்தில் நீ தடைசெய்தால் நிசமாகச் சாவாய்" என்று கூறி அவ்விரண்டெருதுகளின்மீதும் பாய வாலை யசைத்தது. அதை கண்டு, அவ்வுழவன் தைரியமாக அப்புலியினெதிரே போய் நின்று, புலியாரே! நீசொன்னகாரியத்தைச் செய்ய முயலவேண்டும்? யாமபக்குப் பிரியத்தோடு கொடுக்க விரும்பியிருப்பதைப் பெற்றுக்கொள்ளும் பாக்கிய முமக்கில்லைபோலும்! இந்த அற்ப எருதுகளின்மீதாசைபட்டு, அந்தப் பாக்கியத்தை நீரிழக்கலாமா?" என்றான். அவன் கூறியவற்றைக் கவனித்துக் கேட்ட புலி உழவனை நோக்கி, நீ எனக்குப் பிரியத்தோடு கொடுக்க விரும்பியிருப்பதை விளையக் கூறு; இல்லாவிட்டால் உன்னையுங் கொன்றுண்பேன் என்று கூறிற்று. அதற்குவ்வுழவன், தலைமீது கைகூப்பி வணங்கி, "புலியாரே! இவ்வாறு கேட்டுத் தெரிந்துகொள்ளலாமா? எனக்கொரு பெண்ணிருக்கின்றாள்; அவளுடைய அழகுக்குத் திருமகளையும் ஒப்பாகச் சொல்லுதல் கூடாது; அவளொவ்வொருகாலும் என்னை எண்ணமுறைகொத்த புருஷனைச் சம்பாதித்துத் தரல் வேண்டுமென்று கொந்தளவு செய்கின்றாள்; நான் சிலவருஷங்களாகப் பல விடங்களிலும் அவள் கூறியவாறு தேடிப் பார்த்தேன்; உம்மைப்போன்றினமையும், அழகும், ஆண்மையுமுடைய புருஷனை நான் பார்க்கவில்லை; யான் அங்ஙனஞ் சென்று விவாகஞ் செய்விக்கலாமென்று யோசிக்கின்றேன்; அவள் அங்கனைக் கணவனைப் பெறுதற்பின் அவளது வாழ்நாள் சம்பவிலுற்ற கெய்கைப்பாரும். அங்கள் விஷயத்தில் என் புத்திரிக்கு யாதோராட்சேபமு மிராதென்று நினைக்கின்றேன்; அங்களுடைய அபிப்பிராயத்தைத் தயவுசெய்து கூறியருளல் வேண்டும்" என்று மிகப் பயந்தவனைப்போன்று பணிவாகக் கூறினான்.

(2) புலியானது அவன் கூறியவற்றை யெல்லாங் கேட்டுப் பிரமசாரி "எங்கே உன்பெண்ணிருக்கின்றாள்? நான் வந்து பார்க்கலாமா? கூட வரலாமா?" என்று கூறிற்று. அதற்கவன் 'புலியாரே! காங்கள் என் வீட்டிற்கு வரவேண்டுவதின்று; சிறிது தூரம் இவ்விடத்திலேயே தயவுசெய் திருங்கள். நான் பெண்ணைத் தோடிச் சென்றவளே யழைத்து வந்திவ்விடத்திலேயே தங்கட்கு விவாகஞ் செய்து கொடுக்கின்றேன்; நிச்சயமாக உத்தரவு தாருங்கள்" என்று கூறினன். அதற்குப் புலி உழவரே! உம்விஷ்டப்படி செய்யலாம்; சீக்கிரஞ் சென்று பெண்ணை யழைத்து வாருங்கள்; வரும்போது அவளுக்கென்னுடைய அழகு ஆண்மை முதலியவற்றைச் செவ்வையாக விளித்துக் கூறுங்கள்; உமது மகன் விஷயத்தில் யான் பூரண விசுவாசமுடையவனாக விருப்பேன் என்று தழுதழுத்துக் கூறிப்படுத்தது. அவ்வுழவன் அதனைநிசமே விளைக்கோலது போற் காட்டிச் சிறிது தூரஞ் சென்று, ஒரு புதருக்கு மறைவாகச் சிலகோலிருந்து, பிறகு, அப்புலிக்கெதிரே விரைந்தோடி வந்தான். புலியவனைப் பார்த்துக் கோபத்தோடு "எங்கே பெண்? ஏனைழுத்து வரவில்லை? என்னுடைய சொரூப மின்னமுமுனக்குத் தெரியவில்லையா? சீக்கிரஞ் சொல்" என்றது. அதற்கு உழவன் "ஒரு வார்த்தை தங்களிடத்துக் கூற வேண்டும்" அதைப்பற்றித் தான் வந்தேன்; பெண்ணை யழைத்து வருவதைப்பற்றி யாதொரு தடையுமில்லை" என்றான்; அதற்குப் புலி "அந்த வார்த்தை யென்ன? சீக்கிரஞ் சொல்" என்றது. அதற்கு உழவன் "என் பெண்ணினிடத்துத் தங்களது இளமையைப் பற்றியும், அழகைப்பற்றியும், ஆண்மையைப்பற்றியும், உடம்பினமைப்பற்றியும் சேவ்வையாகக்கூறி இப்போதே வரவென்று கூறினேன்; அதற்கவள் அவரது கைகளில் தங்கள் தோலை விரும்பினதை வென்று கூறினீரே; அவர் என்னைக் கட்டித் தழுவும்போது, அந்த தங்கள் எனது பிருதுவான மேனியில் பட்டாலென்ன செய்வது? அந்த தங்களை வாங்கி விடும் பட்சத்தில், தான் தங்கள் கூறிய புருஷனை விவாகஞ் செய்து கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை என்று கூறினாள். தங்களின் விஷயமாகத் தான் சிறிது யோசிக்கின்றேன்; அவையில்லாத பட்சத்தில் யாதொரு தடையுமில்லை" என்று கூறினன். "ஆத்திரக்

காரணத்துப் புத்தி யுட்டு" என்னும் பழமொழிக் கப்புலி யிலக் காகின்று இத்தப் பாழும் கங்களிருப்பது பற்றியன்றே அக் கள் கண்மணி எல்லோக் கவியணஞ் செய்து கொள்ள மாட்டே னென்றுள்; இத்த கங்களை லாவத் தக்கது ஒன்று மின்றே; உமது கையிலுள்ள கத்தியினால் எனது கங்களை வாங்கி விடுங் கள்; மேகள் இனியென் விஷயமாக யுருச வேண்டியதில்லை; விரைவாக மான் கூரியவாறு செய்யுங்கள்" என்றுத்தரத்தோடு கூறிற்று. அதனுடைய ஆத்திரத்தைக் கண்டவுடனே, தாமும் விரைவாக கங்களைக் கத்தியால் வாங்குவது போல நடித்து, அதனிரண்டு கைகளினுள்ள கங்களிலெல்லாவு வாங்க வேண்டி மோ அவ்வளவு தூரம் வாளை யெறிந்து விட்டு, மிளாத்து பெண்ணை யழைத்து வருவது போல நடித்து, பெண்ணை யழைத்து வாட்டமோ? பெண்ணை யழைத்து வாட்டமோ? என்று புலியை கேட்டுக் கூறினான். புலி "அதற்கென்ன தடை விரைந்து போங்கள் என்று கூறி, அவனது வருகையை ஆவலோடு பார்த்திருந்தது. அவ்வழியன் முன் போன்றே விரைந்தோடிச் சென்று, ஒரு புதரில் மறைந்து நின்று கோபித்து பிறகு விரைந்தோடி வந்தான். அதை கண்டு புலி பெருங் கோபத்தோடு சீறியது "இன்னமா பெண்ணை யழைத்து வரவில்லை? அழைத்து வராமைக்குக் காரணமென்ன? காரணை கூறினீர்களானால் ஒரே அறையிற் கொன்று விடுவேன்" என்று கூறியது. அதற்கவ் வழியன் நடு நடுங்கினவனைப் போன்று பாவனை காட்டி "பெண்ணையிட்டுக் கொண்டு வருவதற்குத்தடை யென்பது நிறையு மின்று; என் பெண் தான் கூறும் இந்த வார்த்தையை புலிவேந் தனுக்குச் சுமி வந்தால், பிறகு நான் வருவேனென்று கூறுகின் றான்; அந்த வார்த்தையைக் கேட்டருள வேண்டும்" என்றான்.

(3) அதற்கப்புலி என்னுடை காயகி கூறிய வார்த்தை யாது? அவள் சொன்னவாறு செய்வதற்குத் தடையுண்டோ? என்றது. அதற்குழியன் என்னுடை காயகனோடி நான் கூடிக் குழுவி வும்போது முத்தமிடாதிருக்க முடியுமா? என் பிரிய காயகனுக் குக் கோபப்படாதிருக்கென்று சீக்கள் கூறியதைக் கேட்க எனக் குப் பயமாயிருக்கின்றது; அப்பற்களில்லாத பட்சத்திலத்த காய கனைக்கூடுவதற் கிப்போதே வருகின்றேன்" என்று கூறுகின் றான். "கோபப் படாதீர் தாங்களொழித்து விட்டால்தான் சாகிற்கே பிடியில்லாமற் போம்" என்றான்.

ஆசை பயமறியாது; "மோகம் முன் பின்னறியாது" என்னும் பழ மொழிக்கிலக்கியமாக நின்ற புலி இந்தக் கோரப் பற்களைப் பற்றியா இவ்வளவு நாளும் பேச வேண்டும்; கூடிய சீக்கிரத்தில் உமது கையிலுள்ள மாம்லெட்டுக் கத்தியால் எனது கோரப் பற்களை யெல்லாம் தட்டிப் பிடுங்கி யெறியுங்கள்" என்றது.

(4) வேங்கடராமனென்னும் மல்லமுலன் மிருகினயமாகப்பேசி, புலியின் கோரப்பற்களை யெல்லாம் மரம் வெட்டுக் கத்தியால் தட்டித்தட்டிப் பிடுங்கி யெறிந்துவிட்டுச் சந்தோஷத்தோடு, அதனை நிரே நின்று பெண்ணோவா அழைத்துவர வேண்டும்? அழைத்து வரட்டுமா? என்றகூறி, அதன் பிடரிமயிரை பிழுத்துப் பிடித்துக்கொண்டு போய்க் கலையையிற் கட்டி உழுவாரம்பித்தான். புலியென்ன செய்யும்? பெண்ணுரையாயிப்படி பேதனமை யாஞ்சேம்? இவ்வழுவனிடத்தினின்றும் தப்பிப்போவதெப்படி யென்று யருத்தமுறுதாயிற்று எனது மிகுமதியினும் பெண் ணுருகை சுல்ல அருத்தத்திற்கு மேலுலென்பது கண்குளிரும். பெண்ணுரையை யொழித்தவரே பேதனமையை ஒழித்தவராவர்; பெண்ணுரை பெல்லாரென்பவற்றிற்கு மூலமாக விருத்தலின், அதனையெவ்வாற்றாலேனு மொழிக்கமுயலுதல்வேண்டும். சந்திர னுக்குச்சமமுண்டானதும், இந்திரன் மைத்துனன் சயந்தனுக்கு இரண்டு கண்ணுமொன்றானதும், இராவணன் புத்திர மித்திர களத்திராதிகளுடன் சகோதரனதும் பெண்ணுரையினாலன்றி வேறெதனாலாம்? "பிறர் மனையியலைப் பெற்ற தாய்" என்ற கருதி ஒழுகுகின்ற வில்லறத்தாரும், அனைவரு நியாவரையும் ஆதி பராசத்தியென்று கருதுகின்ற அறவறத்தாருமன்றோ நற்கதி யடைதற்குரியவராவர். பெண்ணுரையை யொழிக்க முயலாத, சுவ்வாவு காலம் வேதாந்தக்கேட்டாலும் ஒரு பிரயோ ஜனமின்றும். பெண்ணுரையை யொழித்து வேதாந்தங்கேட்டு, கேட்டபரெழுகுகின்றவர்களே பரமேசுவரனருளுக்குப் பாத் திரராகி பரகதி யடைவர்.

தாடகம்.

காடகம் என்றால் நடிப்பது என்று பொருள். காடகம் என் னும் பெயர்ச்சொல், 'காடு' என்னும் வினைப்பகுதியை யடியாகக்

கொண்டது. கடப்பது என்பதில் கடப்பு + அது = கடப்பது என் றுயிற்று; அஃதாவது எது கடப்போ அது காடகம்; கடப்பு என்றால் ஒரு விருதத் தன்மையோ, தெய்வத் தன்மையோ, ஆசாரத் தன்மையோ, அல்லது வேறு தனக்கன்னியமாயுள்ள வஸ்துக்களின் தன்மையோ, ஆகிய இவைகளிலேதாவதொன்றைத் தான் மேற்கொண்டு கடப்பதற்கு கடப்பு என்று பெயர்.

காடகம் என்பதில் காடு + அகம் = காடகம்; அஃதாவது, அகம் = ஆத்மாவை; காடு = கட்புக்கொள்; ஓ புத்தியே! நீ ஆத்மாவை நிலைகலருதக் கொள் என்பது பொருளாம். எவ்வாறெனில், தோட்டி வேடம் போட்டு காடகத்தில் கடக்கும் ஒரு பிராமணன், தனக்குள்ளே தான் பிராமணன்; தோட்டி அல்ல; சூத்திரனின் உத்தரப்படி தோட்டியின் வேடம் பூண்டிருந்தேன் என்ற தவிர வேறுகண்டு கின்றதேபோல, காடகத்தைச் சேர்ந்தோர்கள், இத்தேகமாகிய காடக சரீரத்தில் சூத்திரனாகிய எஜமானின் உத்தரவின்மேல் இந்திரியங்களென்றும், அந்தக்கரண மென்றும் வேஷம் பூண்டிருக்கிறேன்; உண்மையாக நான் இந்திரியங்களன்று, மனமதி அந்தக்கரணங்களன்று; உண்மையாக நான் ஆத்ம ஸ்வரூபம்தான் என்று எப்போது உணர முடிகின்றதோ அதை உணர்த்துவதற்காகவே நமது முன்னோர்கள் காடகம் ஏற்படுத்தி வைத்திருப்பது. ஒருவனுக்கு ஒரு விஷயம் சொல்லுவதைவிட அம்மாதிரி தான் கடத்திக்காட்டுவது மிகவும் உத்தம மென்று கண்டு உத்தமர்கள் உதவியிருக்கிற உத்தமத்தை உணர்வதே உத்தமர்களின் கடமையாம்.

காடகம் என்பதில் தேகம் காடகசாலையாகவும் மனம் கடிப பலகையும், புத்தியாகிய சூத்திர தாரியாகவும், விஷயங்கள் காடகம் பார்ப்போர்களாகவும் கொள்ளப்படும்.

"அறம் பொருளின்பம் வீடென நான்கும்
உருவத்தாலாய பயன்" (ஔவையார்)

எனபதற் கிணங்க புருஷார்த்தங்களாகிய இந்நான்கைத் தவிர மற்றவைகளெல்லாம் கடப்பதற்குற்ற நன்மைகளாம்.

ராமன் என்னும் ராட்சச வீரோதி.

(முன் தொடர்ச்சி).

மாமன்வீட்டுக் கதவு மூடியிருந்தது; அதைக் கடகட வென்று சப்தம் உண்டாகும்படி தட்டினான். இதைக்கேட்ட ராமனது மாமனாகிய ராட்சசன் வெளியே வந்து என்னத்திற்கு இச்சப்தம் உண்டாயிற்று என்று பார்த்தான். பின்பு "யார் அங்கே" என்று பெரும் சப்தமிட்டுக் கேட்டான்.

இதற்கு ராமன், "யாருமில்லை; நான்தான், உனது மருமகன், ராமன்" என்றான். இதைக்கேட்ட ராட்சசன், "உன் மாப்பிள்ளைக்கு சந்தோஷமானது. என்ன விசேஷம்? சொல்லு" என்றான்.

"என்ன கஷ்டம்! ஓ! மிகக்கெட்ட சங்கதி சொல்லவேண்டியதாயிருக்கிறது. இராஜகுமாரன் பெரியசேனைசேர்த்துக் கொண்டு இவ்வூருக்கிறான்; அவன் வந்து உன்னைக்கொன்றுவிட்டு, உன்னுடைய வீட்டில் நீவைத்திருக்கிற பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போக நினைத்திருக்கிறான்.

இதைக்கேட்ட ராட்சசன் மிகவிசனப்பட்டான். பின்பு கொஞ்சம் பயந்தெளிந்து சொன்னது, "ஆ! எனது மருமகனே! இன்னென்ன கெட்டசங்கதி! ஹா! ஹா!! ஆனால் ஒன்று; நான் ஓடிப்போய் என்வீட்டுக்குள்ளே யாரும் கண்டுபிடிக்கக்கூடாத ஓர் அறையில் போய் ஒளித்துக்கொள்ளுகிறேன். நீ அந்தவீட்டுக் கதவைமூடித் தாழ்ப்பாள்போட்டுச்சாவிபோட்டுக்கொள். அந்தச் சாவியை ராஜகுமாரன் போகும்வரைக்கும் நீயேவைத்துக்கொள்.

இராட்சசன் உடனே வீட்டுக்குள்போய் விட்டான். இராமன் அறையைப்பூட்டிக்கொண்டு சாவியைப் பத்திரமாகமடியில் வைத்துக்கொண்டான். அப்புறம் ராஜகுமாரன் காத்துக்கொண்டிருந்த இடத்திற்குப் போனான்.

ராமனும் முருகனும் இராட்சசன் வீட்டிற்கு மறுபடியும் வந்தார்கள். கனகச்சாப்பாடு சாப்பிட்டுவிட்டுப்படுத்துக்கொண்டார்கள். ராமன் இராஜகுமாரனுக்கு வேண்டியபொன்னும் வெள்ளியும் கொடுத்தான். முன்னூல்தூரம் வரைக்கும் ராமன் ராஜகுமாரனுடனே போனான். அதற்கப்புறம் ராஜகுமாரனுக்குப் பயமில்லை என்று சொல்லி அவனை அனுப்பிவிட்

டான். ராமன் மறுபடியும் மாமனை ராட்சசன் விட்டிருக்குமிடத்தான். ராட்சசன் இருந்த அறையின்கதவைத்திறந்தான்; அவனை வெளியேவிட்டான். ராட்சசன் இவனைப்பார்த்து, "மருமகனே! நீ எனக்கு மிகப்பட்சம் காட்டினாய்; உனக்கு என்ன வேண்டுமென்றுகேட்டான்; அதற்குராமன் ஒன்றும் வேண்டாம்; உனக்கு இவ்விடமானுல் உன்னுடைய பழுவத்தையும், பெட்டியிலிருக்கும் உனது சட்டையும், உனது படுக்கையிலிருக்கும் தொப்பியும், கால்ஜோடுமட்டுமே," என்றான்.

இதற்கு ராட்சசன் "அப்படியா; உனக்கு அவற்றைக்கொடுக்கிறேன்; அவை அதிக உபயோகப்படும். மேல்சட்டை போட்டுக்கொண்டால் நீ இருக்கிற சங்கதியாரும் தெரிந்துக்கொள்ள மாட்டார்கள்; தொப்பி எல்லாவற்றையும் உனக்குத் தெரியக்காட்டும், அக்கத்தியால் எதை அடிக்கிறாயோ அது துண்டுதுண்டாகிவிடும்; ஜோடுபோட்டுக்கொண்டால் அதிவேகமாகப் போகலாம்.

ராமன் இந்த வெகுமானங்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு இராஜனைத்தேடிப்போய் அவனைச்சேர்ந்தான். பிறகு இராஜகுமாரனைப் பின்பற்றிப்போனான். இரண்டுபேரும் சேர்ந்து கொஞ்சதூரம் போனார்கள். இராஜகுமாரன் தன் அரண்மனைக்குப் போய்விட்டான். ராமன் மாத்திரம் தன்னியாய்ப் போய்க்கொண்டிருந்தான்.

அப்படிபே போகும்போது வழியில் ஒருபெரிய அரண்மனையைப்பார்த்தான். அங்கு ஒரு பெரிய விருந்துநடந்துகொண்டிருந்தது. அங்கிருந்தவர்கள் இந்த வாலிபனை இன்னும் என்னு கொஞ்சநேரம் இவனையும் விருந்துக்கு அழைத்தார்கள்.

அந்த விருந்துக்கு வந்திருந்தவர்கள் மிகச்சந்தோஷமாக இருந்தார்கள். அப்போது ஒரு பெரும் ராட்சசன் அங்கேவந்துக்கொண்டிருக்கிறான் என்று ஒருபையன் சொன்னான்.

அதைக்கேட்ட ராமன் "நீங்கள் பயப்படவேண்டாம். என் ராட்சசனையும் எனக்குவிட்டுவிடுங்கள், நான்பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

உடனே ராமன்கொடுத்த சட்டையைப் போட்டுக்கொண்டான். அதனால் அவன் யாருக்கும் தெரியாது மறைந்து விட்டான்.

பிறகு அந்த ஜோட்டைப் போட்டுக்கொண்டான்; அது அவனை வெகுசீக்கிரமாய்க் காற்றைப்போல் கொண்டுபோனது.

அந்த ராட்சசனது அண்மனைத் தெருக்களிலிடம் போய்ச் சேர்ந்தபோது, உரக்கக்கூச்சலிட்டுப் பாடினான்.

ஹா ஹா ஹி ஹீ ஹோ ஹோ ஹோ

(முன்தொடர்ச்சி.)

அறிவுடையார் தாம் செல்லும்போது செய்யுஞ்
செயல்களினையா மெனல்.

(31) அறிவுடையார் இரண்டு தேவர் மத்தியிலும், பார்ப்பார் மத்தியிலும் செல்லார்; தம்மின விடத்துப் பெரியார் வாழ்த்தினால் அவரை வணங்கித் துதிப்பார்; தம்மோடொப்பார் தாம் சொல்லும்பொது வக்கால் அவர்க்கு நேரேசென்று மனமகிழ்ந்து அவரை யுபசரித்தழைப்பர். இரண்டு தேவர் - இரண்டு தெய்வ விக்கிரகங்கள்.

எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும் இவ்விவ்விடங்களில்
செய்தல் கூடாதெனல்.

(32) உணர்வுடையார் புல்லிலும், விறகிலத்திலும், ஆப்பியிலும், சுடுகாட்டிலும், வழியிலும், தீர்த்தத்திலும், தேவாலயத்திலும், கிழவுள்ளவிடத்திலும், பசுமந்தை யிருக்குமிடத்திலும், சாப்பலிலும் எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும் செய்யார்.

ஆப்பி - பகுஞ்சாணி; தீர்த்தம் - நீர்நிலை.

மலஜலங்கழிக்கும் காலதிசைமண்டலமும்
தியில் நீரூற்றுங்காலதையுங் கூறல்.

(33) அறிவுடையார் பகலில் தெற்கு நோக்கியும், இராத்திரியில் வடக்குநோக்கியுமிருந்து மலஜலங்கழியார்; பகற்பொழுதில் தியில் நீர்வார்த்து அதனையணையார்.

தீ - சமையலறையிலுள்ள நெருப்பு.

அறிவுடையார்எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும்
செய்யும்போது செய்யும் பாவனைகூறல்.

(34) யாம் நால்முறையாக வொழுகுதல் வேண்டுமென்று கருதுமறிவுடையார் பத்துத்திக்குக்களையும் மனத்தால் மறைத்து வாருகப்பாவித்து, அப்பத்துத்திக்களிலன்றி வேறிடத்திலே செய்வதாகக்கருதியல்லது இச்சரீரம் விக்கிரமுலகத்தைப் பெற்றாலாயினும், எச்சிலுமிழ்தலையும் மலஜலங்கழித்தலையும் செய்யார்.

வாய்மூடுக்கிரமத்தைச் கூறல்.

(35) அறிவுடையார் சிலர் ஒருபாத்திரத்தில் முகர்ந்து நீர் வார்க்க வாய்கழுவுதல் முடியாதாயின், கீழில் சின்ன கொண்டியை கட்டி கொண்டியை வாய்கழுவுவர்; இவ்வாறு நீரால் வாய்கழுவுதல் வேண்டுமென்று ஒரு வரையறை செய்துகொண்டே நீரால் வாய்கழுவுவர்.

தம்கடமையை யறிந்தவரது செயலது இவையாமென்க.

(36) எப்போதும் தமது கடமையை யறிந்த அறிவினையுடையவர் ஒருவனிக்குமிடத்திற்கும் விளக்கிற்கும் கடவே போகார்; கவரினீது சுக்கிறுமிழார்; தமக்குக்குளிரால்பெருங்கஷ்டமுண்டாயிலும், பிறர்கட்டிய அழுக்கு வஸ்திரத்தைக் கீழே போட்டுக்கொள்ளார்; மேலே போர்த்துக்கொள்ளார்; தம்மை வருத்த பகைவர் ஆயுதங்களுடன் வந்தாராயிலும், தாம் கட்டியுள்ள வஸ்திரத்தின் கரைப்பிறர் மீது படச்செல்லார்; பலர் கடவே நின்று தாம் கட்டியுள்ள வஸ்திரத்தை யலித்துதறார்.

இம்பெரும் பாதகங்களை யறிவுடையார் செய்யக்கருதாரென்க.

(37) பிறர் மனையினை விரும்புதலும், கள்ளுண்டலும், களவுசெய்தலும், சூதாடுதலும், கொலை செய்தலுமாகிய இவ்வையத்தும் நரகத்திற்குச்செல்லும் வழியில் (தம்மையுடையவரைச்) செலுத்துதலால், இவ்வைந்தினையும் யாம் செய்வமென்ன அறத்தை யறிந்தவர்கருதார்; கருவராயின், இறப்பழிவென்ன பலரால் இகழப்படுதலுமில்லாமல் (மறுமையில்) சுகத்தையுமடைவர்.

ஐயந்தீர் காட்சியார் சிந்தியாதன இவையென்க கூறல்.

(38) ஐயம் தீங்கை அறிவினையுடையவர் பொய் பேசுதலும் கோட் சொல்லுதலும் பிறர் பொருளை யபகரிக்கவேண்டுமென்னு விரும்புதலும், பிறரது ஆக்கத்தைக் கண்டு பொறாமை யடைதலுமாகிய இவ்வைன்னினையும் நினையார்; நினைப்பாராயின், அவை அவர் தம்மைப்பிரசையெடுத்தாறு செய்து நீருதற்கரிய நரகத்திலும் செலுத்தும்; நிதவ்வழும் கெடுத்துவிடும்.

ஆக்கம் - மேன்மேலுயர்தல்.

சமயத்தான்னுங் சமதிரைகளுறல்.

(39) அறிவுடையார் தமக்கென் றமைப்பின்றி உலகமையை யார்; தெய்வத்தின் பொருட்டாக வல்லாமல் தம்பொருட்டாக

ஒரு பிராணியைக்கொன்று மாமிசத்தைக்கொள்ளார்; சமைய லறையில் எச்சிற்செய்யார்; மனையில் வசிக்கும் தெய்வங்களுக் குப் பலி பூட்டினமையை யறிந்த நெரு தரமுணவுண்பர்.

குரவர் தமக்கினைய சுற்றத்தாருண்ணும் போதிருக்கும் நிமித்தைக்கூறல்.

(40) குரவர் தமக்கினைய சுற்றத்தாருண்ணும் போது உயர்ந்த ஆசனத்திலிரார்; அச்சுற்றத்தார் முறைமை கடந்து தீய காரியங்களைச் செய்திருந்தாராயினும், அவர் தம்மனம் கொந்தழி தற்குரிய செயலைச் செய்யார்.

உறுதி மொழி.

எல்லா மறிந்தவ னென்கு மில்லை.
அறிந்தமைக் கழகுள் ளடங்கி யொழுகுதல்.
அடக்க முடையவ னறிவு ருண்மையை.
உண்மை யுணர்ந்தவ னொன்றும் விருப்பார்.
விருப்பில் லாதவர் வெறுப்பில ராவர்.
வெறுப்பிலார் சித்தம் வெளிபோல் விளங்கும்.
சித்தமா சற்றூர் தியக்கமற் றிருப்பர்.
தியக்க மற்றவர் சேரா ருலகில்.
உலகிற் சேரா ருறுதிய சொலிவர்.
துயிலார் ருண்மை துன்னுவர் தாமே.

ஞானசாதனநீலை.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்
புத்திசா ரித்தறியும் பொலிவதனு லரவாம்
கண்போல வீலியெனலா லகங்காச மதமா
கணிகாரஞ் சித்தமொரு தன்மையினு ஞயா
மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி
விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
வன்போடி வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடத் திருந்துசித்த மசத்தவமுந் தருமே.

சுகாதாரம்.

சுகம் வேண்டாம், தேகம் நிலையில் என்னும் இச்சை யுடையவரிலை இவ்வுலகின்கண்ணில்லை. அதனால் மனிதர் இவ்வுல கின்கண் அநுபவித்தற்கு யோக்யமாயுள்ள இன்பங்களுள் சரீர சுகமே முதன்மையானதாம்; சுகமினம் பிருதியும் துன்பத்தைத் தருவதாம். மக்கள் உண்ணும் உணவுப் பொருள்களை ஜீரணஞ் செய்யும் சுரணிகளும், உண்ட ஆகாரிகளிலிருந்து இரத்தத்தை யுண்டாக்கி, அதனைச் சரீர முழுதும் வியாபிக்கச் செய்யும் சரம் புக் குருணிகளும், ரத்தத்தைச் சுத்தஞ் செய்யுமாறு வாயுவை உட் கொள்ளும் சுவாசக்குருணிகளும், பிற குருணிகளும் சமநிலைமையி லிருந்து சரீரத்தையியக்கும்போதுதான் மனிதன்சுகஜீவியிலிரு க்கின்றான் என்று கூறுவின்றோம். மக்கள் சுகசரீரிகளாயிருக்கற் பொருட்டு பகவான் நமக்கு ஆயுள் வேதத்தைக் கொடுத்திருக்கின் றார். அந்த வேதத்திற் குறிப்பட்டுள்ள விதி விலக்குக்களை யதா சரித்து நடப்பவர் பெரும்பான்மையும் நிடராத்தியாயிருந்து, நீடி த்த ஆயுளைப்பெற்றுச் சுகமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவ் விதி விலக்குக்களை யதாசரித்து நடவாதவர்கள் பெரும்பான்மை யும் சரீர பீடையுற்று அற்ப ஆயுளுடையவராய்த் தங்களாக வாழ்கின்றார்கள். தித்திய கர்மானுஷ்டானங்கள் செய்வதற்கும், போஜனஞ் செய்வதற்கும், வேலை செய்வதற்கும், போகஞ் செய் வதற்கும், உறங்குவதற்கும் கால அளவைகளைப் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவ்விதிகளை யதாசரித்து நடப்பவர் பெரும்பான்மையும் சுகமாக வாழ்ந்து வருகின்றார்களென்பது பி ரத்தியக்ஷமாம். மக்கட்கு சரீரம் ஆரோக்யமாயிருப்பதும், அரோகி யிருப்பதும் விதிவசத்தினாலாமென்று அறிவீனர் கூறுகின்ற னர். ஆயுள் வேதத்தில் கூறப்பட்டுள்ள விதி விலக்குக்களைப் பொருட்படுத்தாது யதேஷ்டாசாரிகளாயிருப்பவர் பெரும் பான்மையும் அற்பாயுளுடையவராயும், அரோகளாயும் வாழ்ந்து வருவதாம் பிரத்தியக்ஷம். பகவான் விதியையும் விதித்து, அதனை மீறுவதற்கு மதியையும் மக்கட்குக் கொடுத்திருக்கின்றார். விதியையும் மதியினால் வெல்லலாமென்னும் பழமொழி வழங்கி வருவதாம் உலகப் பிரத்தியக்ஷம். அதனால் சரீரம் நிலைத்திருத் தற்கு அத்தியாவசியமான வாயு, ஜலம் போஜனம், நித்ரை சுத் தம், நேரப்பயிற்சி, நித்திரை, வாசஸ்தலம், மநோவசனமதி

முதலிய விஷயங்களைப்பற்றி மிகவாகக் கூறும் சாஸ்திரங்களை ஒவ்வொருவரும் தம்மை அறிந்து கடைப்பிடித்து விதி விலக்குகளை அறிந்து நடப்பது அத்தியாவசியமாம். சரீரமும், மனமும் சமநிலைமையிலிருக்கச்செய்து இகலோக வின்பத்தையும் பூரணமாய் மக்கள் அநுபவித்தற்குச் சாதகியமாகும்.

அறிவுடைமை

சோர்வுமாதபடிக்கும், பலவாற்றானும் வாசபடிக்கும், காக்கின்றதற்கு அறிவே காரணமாதலால், அதனிடத்து எப்போதும் சிந்தை வைத்து நடக்கவேண்டும்.

மனம்போனவழியிற் புத்தியைப் போகவிடாமல் கண்மார்க்கத்திற் செலுத்துவது அறிவே யாதலால், அதைச் சிக்கெனப் பிடித்திருக்க வேண்டும்.

சாதி மதிவிருது (ஸ்திரீத்வம், சாதிபேதம், தாமஸம் என்னும்) மூன்குணக்களின் கண்மையால் கல்வி பொருளைத் தீயோரிடத்தி லும் நீயபொருளை கல்லோரிடத்திலும் கேட்டிலும், அவைகளின் தன்மைகளைப் பகுத்தறிந்து, உண்மை இன்னதென்று கண்டறிவதே அறிவாம்.

அறிவில்லாத மனிதர் வாழ்வையிழந்துப்படுவதற்கு பல திருஷ்டாந்தம் வேண்டுவதில்லை; ஏனெனில், அறிவுடையவன் பலஜீவனை விருத்தாதும் இக்கட்டி வந்தவிடத்தும் தப்பித்துக் கொள்வான்; அறிவிலான் பரசவியாக விருத்தாதம் ஒருவனுக்கு உபதேசிக்கும்படி நேரிட்ட காலத்தில் தப்பித்துக்கொள்வது கடினமாம்.

இவ்வரும் கண்ண நீதிகளை இவ்விதமாக வருமென்று புத்திக் கூர்மையால் முன்னறிந்து கடப்பவர்களே அறிவுடையோ ரென்னும், அப்படிக்கறிந்து கடவாதவர்களை அறிவிலரென்னும் பெரி யோர் கூறியிருக்கின்றனர்;! அறிந்துபவருமாம்.

ஒரு கூட்டத்தில் 3 மீன்களிருந்தன; அவற்றிலொன்று வருங்காலமறிந்து தக்கபடியுபாயவறிவுடையது; மற்றொன்று ஒரு காரியம் சேர்ந்தபின் தகுதியான புத்திசெய்து பலனடையத்தக்க அறிவுடையது; மூன்றாவது வருவது வாராமம் போனதென்ன கருதிமுயலாமலிருக்கும் புல்லறிவுடையது. இம்மூன்று மீன்களும் செங்காலமாய் அக்கூட்டத்தில் வாழ்ந்துவரும்பொழுது ஒரு

கால் ஒரு செம்படவன் மீன்பிடிக்க வந்தான். அவன் வந்த அரவங்கண்டு வருங்காரியமறிந்து முயல்கின்ற மீன் தடாகத்தின் பாதாளத்தில் முழ்கி மண்ணைக் கடித்துக்கொண்டோரிடத்தில் அடங்கியிருந்தது. ஸமயோசித புத்தியுள்ள இரண்டாவது மீன் அப்படிக்குச் செய்யாமலிருந்தபடியால், செம்படவன் எறிந்த வலைக்குள்ளகப்பட்டு வருந்தித் தப்பிப்போக வென்னவழியென்று யோசித்து ப்ராணன் போழுந்ததுபோற் கைகால்களை யசைக்காமல் அவன் போட்டவிடத்திற் கிடந்து ஸமயம்பார்த்துத் துள்ளித்தொப்பென்று தண்ணீரிற் குதித்தோடிப்போய் க்ஷேமமடைந்தது. வருவது வாராமற் போகாதென்கிற நினைப்புள்ள மீன் வலையிலகப்பட்டதுமன்றி செம்படவனுற் கரையிற் போடப்பட்டவுடனே துள்ளித்துள்ளி விழுந்தபடியால் இது தண்ணீரில் விழுந்தோடிப்போமென்று நினைத்துச் செம்படவன் யுகதக் காலால் மிதித்துக்கொன்று போட்டான். ஆதலால் வருங்காரியமறிந்து நடப்பவனே உத்தம புத்திமானென்றும், ஸமயோசித புத்தியுள்ளவனே மத்திமனென்றும், வந்தது வரட்டுமென்றிருப்பவனே அதமனென்றும் சொல்லவேண்டும்.

பழிபாவங்களுக் கஞ்சாதிருப்பது மூடருடைய தன்மை; அஞ்சி நடப்பது அறிவுடையவர்களுடைய செய்கையாம். ஆதலால் அறிவு எல்லாவற்றிற்கும் சிறந்ததாம்.

எல்லாச் செல்வங்களுக்கும் அறிவே காரணமாதலால் அறிவுடையோர்க்கொன்று மில்லாவிடினு மெல்லா முண்டென்றும், அறிவிலார்க்கு எல்லாமுளவாயினு மொன்றுமில்லையென்றும் பலமாலுமுணர்ந்தது.

ஆதலால் அறிவைநோக்கி யுலகத்தோடொத்து வாழவேண்டும்.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாகண்டத்தில் நடக்கும் யுத்தம் மிகு உக்ரமாக நடந்து வருகின்றது; மேற்குப் போர்முகத்தில், சோம் நதிப் பிரதேசத்தில் ஜெர்மானியர் பெருஞ்சேனை திரட்டிவந்து போர்புரிந்து வருகின்றனர்; இவ்விடத்தில் எவ்விதத்திலும் பிரிட்டிஷாரையும், பிரெஞ்சுக்காரரையும் முன்னேறிச்செல்ல வொட்டாது செய்தல் வேண்டுமென்று பெரும்பிரயத்னஞ்செய்து வருகின்றனர்; அங்ஙனமிருக்கும் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் பிரங்கிப்படையின் பலத்தினால் முன்னேறிச்சென்று

Registered No. M. 520.

கொண்டிருக்கின்றனர். வர்னோப்பிடிக்க ஜெர்மானியர் 200 நாள் கடுமையான யுத்தஞ்செய்தும், முடிந்து அவர்களால் சாத்தியப்படாமற்போனது. அதனாலவர்கள் வர்னேவைத்தாக்கிப் பிடிக்கும் யோசனையை விட்டுவிட உத்தேசித்திருக்கின்றனர். இவற்றால் ஜெர்மானியரது பலங்குறைந்து வருகின்றதென்றே கூறவேண்டியிருக்கின்றது.

ருஷ்யப்போர்முகத்தில் ருஷ்யர் கலீஷியாவைக்கடந்து கார்பதியின் மலைக்கணவாய்களில் பிரவேசித்திருக்கின்றனர், இழுக்குப் போர்முகத்தில் ஜெர்மானியரையும், ஆஸ்டிரியரையும் தில்காட்டவொட்டாது அடித்துத்துரத்தி வருகின்றனர்.

ரொமேனியர் நேசராஜாங்கத்தாரோடு சேர்ந்து ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்து, ஆஸ்டிரிய ஹங்கரியில் 20 மைல்தூரம் பிரவேசித்துவிட்டனர்; டிரான்ஸில்வேனியாவை ஆஸ்டிரியர் கப்பற்றுவதற் அசக்தராய்விட்டனர்; அதனால் டிரான்ஸில்வேனியா முற்றும் ரொமேனியர் வசமாய்விடும். இப்போது ரொமேனியரும் ருஷ்யரும் சேர்ந்து ஜூலடிரிகருடன் போர்செய்து வருகின்றனர். ருஷ்யர் ரொமேனியா மூலமாகப் பல்கேரியாவினுள் சென்று பல்கேரியரோடு போர்செய்து வருகின்றனர்; பல்கேரியாவினும், செர்பியாவினுமுள்ள இலகரங்களையும் பிடித்திருக்கின்றனர். ருஷ்யரும், ரொமேனியரும் சேர்ந்து செர்பியாவை மீட்டுக்கொள்வார்கள்; பல்கேரியா சமாதானத்திற்கு வரவேண்டும். அது செர்பியாவின் கதியாய்விடுமென்பது சந்தேகமற்ற விஷயமாம். ருஷ்யர், கலோனிக்காவி விருந்துவரும் நேசதேசசேனைகளுடன் சேர்ந்து துருக்கியை யெதிர்ப்பார்கள். அப்போது துருக்கியின்கதி அதோகதியே ஆகிவிடும். இப்போது கலோனிக்காவிலிருந்து வந்து பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும், செர்பியரும் பல்கேரியரை யெதிர்த்து வருகின்றனர். சிக்கிரத்தில் பல்கேரியா வடக்கு, மேற்கு, தெற்குப் பாகங்களில் நேசக்கட்சியாரால் சூழ்ந்து கொள்ளப்படும்.

இதனால் தடைபடாது முன்னேறிச்சென்றுகொண்டிருக்கின்றது; அஃது அஸ்போனியாவிற்கும் சேனையை அனுப்பிவிருக்கின்றது.

ரொமேனியா நேசக்கட்சியுடன் சேர்ந்துவிட்டமையின், கிரீசும் நேசக்கட்சியாருடன் சேரவே வேண்டியிருக்கின்றது; அதைப்பற்றிக் கிரீசில் இப்போது பெருங்குழப்ப முண்டாயிருக்கின்றது. கிரீசும் நேசக்கட்சியுடன் சேர்ந்துவிடுமாயின் யுத்தம் சீக்கிரம் முடிவுபெறும்.

Printed & Edited by K. Vadivelu Chettyar at the Sacchidhanandha Press, Komaleeswaran Pet, Madras.